Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk
FRIDAY, MARCH 31, 2023

வெள்ளிக்கிழமை மார்ச் 31, 2023 | ஒளி: 08 கதிர்: 241 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## இலேசாக அதிர்ந்தது பேருவளை



பேருவளையில் இருந்து 24 கடல் மைல் தொலைவில் உள்ள கடற்பரப்பில் ஏற்பட்ட 3.7 மெக்னிடியூட் அளவிலான நிலநடுக்கம் காரணமாக பேருவளையை அண்டிய கரையோரப் பகுதிகளில் 30 விநாடிகளுக்கு நில நடுக்கம் உணரப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

---

உரிமைகள் பற்றி பேசுவோர்

## காட்டி கொடுத்துள்ளனர்



சோசலிசம், பாட்டாளி வர்க்கம் மற்றும் தொழிலாளர் உரிமைகள் பற்றி பேசும் தரப்புகள், அதிகாரத்துக்காக தங்கள் கொள்கைகளைக் காட்டிக் கொடுத்துள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, ஐக்கிய மக்கள் சக்தி கொள்கை ரீதியான கட்சி என்ற வகையில், மனிதாபிமான முதலாளித்துவத்தை எப்போதும் நம்புவதாக தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

---

பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து இனப்பிரச்சினையை

# பிரிக்க முடியாது



**நாடு அபிவிருத்தி அடைய வேண்டுமானால் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்**

**'IMF மற்றும் அதற்கு அப்பால்' கலந்துரையாடலில் ஜனாதிபதி**

**இலங்கை முன்னேற இதுவே இறுதிச் சந்தர்ப்பம் என்கிறார் ஜனாதிபதி**



இனப்பிரச்சினையை பிரதான பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து பிரிக்க முடியாது எனவும், நாடு அபிவிருத்தியடைய வேண்டுமானால் அதற்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

இலங்கையை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு இதுவே கடைசி சந்தர்ப்பம் எனவும், பரஸ்பரம் குற்றம் சுமத்தாமல், அடுத்த தலைமுறைக்கு சுபீட்சமான சமூகத்தை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைய வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

---



குருந்தூர் மலை விவகாரம்

## கண்கூடாக பார்வையிட்டு கட்டளை பிறப்பிக்குக

**ஆலய நிர்வாகத்தால் மன்றிடம் மன்றாட்டம்**


*விஜயரத்தினம் சரவணன்*

முல்லைத்தீவு, தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்த விகாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றமை குறித்து, நீதவான் நேரடியாக வருகைதந்து பார்வையிட்டு அதனடிப்படையில் வலிதான பிணிக்கும் தன்மையுடைய கட்டளை ஒன்றை வழங்கவேண்டும் என்று குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகம் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகளால் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

---

## பேக்கரிகளுக்கு இந்திய முட்டை



இந்தியாவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட முதலாவது முட்டை தொகுதி, பேக்கரி உற்பத்தியாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என். கே. ஜயவர்தன, வியாழக்கிழமை (30) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

---

## மனித உரிமை இணைப்பாளர் ஆலயத்தை பார்வையிட்டார்

*செ.கீதாஞ்சன்*



நெடுங்கேணி, வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தை, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் எம்.ஆர். பிரியதர்சன, வியாழக்கிழமை (30) சென்று பார்வையிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

---

நிதியமைச்சின் செயலாளருக்கு எதிரான

## இரு மனுக்களும் மே 22இல் பரிசீலனை

உயர் நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை செயற்படுத்தத் தவறிய நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக குற்றம் சுமத்தியும் அவருக்கு தண்டனை வழங்குமாறு கோரியும் தாக்கல் செய்யப்பட்ட 2 மனுக்களை மே மாதம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்காக உயர்நீதிமன்றம், வியாழக்கிழமை (30) ஒத்திவைத்தது.

தொடர்ச்சி P2

---





## இறுதி அஞ்சலி

இலங்கை பாராளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகரும், அமைச்சருமான அமரர் ஜோசப் மைக்கல் பெரேராவின் பூதவுடலுக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று (30) இறுதி அஞ்சலி செலுத்தினர்.

---

## ஆளுநரின் நடவடிக்கையை நிறுத்த குரல் கொடுக்கவும்

**ஏறாவூர் பள்ளிவாசலால் சாணக்கியனுக்குக் கடிதம்**


*ஏ.எச்.ஏ. ஹுஸைன்*

இன ஐக்கியத்தைச் சீர்குலைக்கும் கிழக்கு மாகாண ஆளுநரின் நடவடிக்கைகளை நிறுத்தக் குரல் கொடுக்குமாறு கோரி, ஏறாவூரிலுள்ள மஸ்ஜிதுர் றிபாய் பள்ளிவாசல் நிர்வாகம் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் இராசபுத்திரன் சாணக்கியனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

தொடர்ச்சி P2

---

## தங்கமும் டொலரும் உயர்ந்தன



இலங்கையில் தங்கத்தின் விலையும் ரூபாய்க்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதியும் வியாழக்கிழமை (30) அதிகரித்துள்ளமை வெளியாகியுள்ள தரவுகளின் மூலம் தெரியவருகிறது

இலங்கையில் தங்கத்தின் விலை வியாழக்கிழமை (30) மீண்டும் அதிகரித்துள்ளதாக கொழும்பு, செட்டியார் தெரு தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதன்கிழமை (29) 161 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு பவுண் 22 கரட் தங்கம், வியாழக்கிழமை (30) 163 ஆயிரத்து 800 ரூபாயாக அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2

---

## தாக்குதல் நடத்திய 4 பேர் கைது



சப்ரகமுவ பல்கலைக்கழக விடுதிக்குள் அத்துமீறி நுழைந்து, முதலாம் ஆண்டு மாணவர்களை தாக்கிய சம்பவம் தொடர்பில் 4 சந்தேகநபர்கள், குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

23, 24, 25 வயதுடைய தெஹிவளை, மொரட்டுவை, அம்பலாங்கொடை, வெலிமடை ஆகிய பகுதிகளை சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

---

கோரிக்கையை நிறைவேற்றினால்

## கட்டணங்கள் 10% குறையும்



தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் பட்சத்தில், பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்து கட்டணத்தை 10% குறைக்கத் தயாராக உள்ளதாக அகில இலங்கை பாடசாலை போக்குவரத்து சங்கத்தின் தலைவர் ருவன் பிரசாத் தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்டாலும் கட்டணத்தை குறைக்க முடியாது என்றும் தமக்கு வழங்கப்படும் எரிபொருளின் அளவு போதுமானதாக இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

---

மட்டக்களப்பில் காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு:

## கூட்டத்தில் அமளி துமளி; களேபரத்தில் பெண் காயம்







*கனராசா சரவணன்*

மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்தி திட்டம் என்ற போர்வையில் இடம்பெறும் காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து, மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தை வியாழக்கிழமை (30) முற்றுகையிட்டு நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் ஏற்பட்ட களேபரத்தில் பெண்ணொருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தொடர்ச்சி P2

---

மலையக தோட்ட பகுதியில் உள்ள

## அனைத்து குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்

**பாரபட்சம் வேண்டாம் என்கிறார் வேலு குமார்**



மலையக தோட்ட பகுதிகளில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் நிவாரணம் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்றும் நிவாரணம் வழங்கலில் பாரபட்சம் காட்ட வேண்டாம் என்றும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்தார்.

கண்டியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“அரசாங்கம் நிவாரண திட்டங்களை முன்னெடுக்க ஆரம்பித்துள்ளது. அதன்போது, நிவாரணம் வழங்கலில் பாரபட்சம் காட்ட வேண்டாம். மலையக தோட்ட பகுதிகளில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் நிவாரணம் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

தொடர்ச்சி P2

தமிழ்Mirror www.tamilmirror.lk

PAGE 1 தொடர்ச்சிகள்

# காட்டிக் கொடுத்துள்ளனர்

ஐக்கிய மக்கள் சக்தியின் த புளூ பிரின்ட் பொருளாதார மாநாடு புதன்கிழமை (29) காலி மாவட்டத்தை இலக்காகக் கொண்டு இடம்பெற்ற போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

அங்கு மேலும் தெரிவித்த அவர், நமது நாட்டிற்கு சரியான கோட்பாட்டு ரீதியான வேலைத் திட்டம் தேவை என்றும் இந்த கோட்பாட்டை நாட்டுக்கு ஏற்றவாறு மாற்றியமைக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

ஓர் அரசாங்கத்தால் செல்வத்தை உருவாக்க முடியாது எனவும், சமூக சந்தைப் பொருளாதாரத்தை மையமாகக் கொண்ட தேவை மற்றும் வழங்கலை அடிப்படையாகக் கொண்ட சந்தை சக்திகளுக்கு முன்னுரிமை அளிக்கும் முயற்சியாண்மைகளுக்கு முன்னுரிமையளிப்பதே செல்வத்தை உருவாக்குவதற்கான சிறந்த வழியாகும் எனவும் தெரிவித்தார்.

இந்த முதலாளித்துவம் ஒருசிலரை போஷிப்பதானதாகவே அல்லது நட்பு வட்டார முதலாளித்துவமாகவோ இருக்கக் கூடாது என்றும்,நாட்டிலுள்ள அனைவருக்கும் பொதுவானதாக அது அமைய வேண்டும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்நாட்டில் ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதற்கு திட்டங்களை வகுத்துக் கொண்டிருப்பவர்களிடம் சர்வதேச நாணய நிதியத்தைத் தவிர வேறு வழிகள் உள்ளதா என்று கேட்க வேண்டியுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தாம் பார்ப்பது போல், சர்வதேச நாணய நிதியத்தை சரியாக கையாள்வதன் மூலம் நாடு முகம்கொடுக்கும் தற்போதைய சூழ்நிலையில் இருந்து மீள முடியும் என்றாலும், சர்வதேச நாணய நிதியத்தை தமதமாக அணுகியதால் வலுவான இருதரப்பு பேச்சுவார்த்தைகளை எட்ட முடியாது போனதாக சுட்டிக்காட்டினார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் முறையான ஒப்பந்தங்களை மேற்கொள்ளாமை குறித்து எதிர்க்கட்சியிடம் விமர்சனங்கள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# பிரிக்க முடியாது

கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் வியாழக்கிழமை (30) முற்பகல் நடைபெற்ற "IMF மற்றும் அதற்கு அப்பால்" கலந்துரையாடலில் பிரதான உரையை ஆற்றிய போதே ஜனாதிபதி மேற்குறிப்பிட் விடயத்தைத் தெரிவித்தார்.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பிரதம நிறைவேற்று அதிகாரி கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்திற்கு அப்பால் சென்று அடுத்த தலைமுறைக்கு வளமான சமூகத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அரசாங்கம் அதில் உறுதியாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

டி.எஸ். சேனாநாயக்கவின் முன்மொழிவுகளுக்கு அமைய செயற்படாதது மற்றும் 1965 ஆம் ஆண்டு ஷெனோய் அறிக்கையை அமுல்படுத்தாதது உட்பட அபிவிருத்தியை அடைவதற்கான வாய்ப்புகளை இலங்கை தவறவிட்டதை நினைவுகூர்ந்தார்.

1978 இனப்பிரச்சினையால் நாட்டின் முன்னேற்றம் மந்தமடைந்ததாகவும், அதன் மூலம் நாட்டில் மீண்டும் அபிவிருத்திக்கான அடித்தளத்தை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பத்தை இழந்ததாகவும் தெரிவித்தார்.

இனப்பிரச்சினையை பிரதான பொருளாதாரப் பிரச்சினையிலிருந்து பிரிக்க முடியாது எனவும், நாடு அபிவிருத்தியடைய வேண்டுமானால் அதற்குத் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

பசுமைப் பொருளாதாரத்திற்கான இலங்கையிலுள்ள சாத்தியக்கூறுகள் சாதகமாக உள்ளதாகவும், நாடு அதனை நோக்கிச் செல்வதுடன், விரைவில் டிஜிட்டல் மயமாக்கலை ஆரம்பிப்பதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், ஸ்ரீ லங்கன் மற்றும் இலங்கை மின்சார சபை ஆகியன ஏற்கனவே நாட்டின் வளங்களை அதிகம் வீணடித்துள்ளன. அவற்றுக்காக அன்றி, வறியவர் மற்றும் பாதிக்கப்பட்டோரின் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பிற்கு பணம் தேவைப்படுவதாகவும் இங்கு ஜனாதிபதி தெரிவித்தார்.

# இலேசாக அதிர்ந்தது பேருவளை

நிலநடுக்கம் குறித்து அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலியிடம் வினவியபோது, சுமார் 30 வினாடிகள் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் எவருக்கும் பாதிப்பு ஏற்படவில் என்றும் தெரிவித்தார்.

வியாழக்கிழமை (30) பிற்பகல் ஒரு மணியளவில் பேருவளை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சில பகுதிகளில் இலேசான நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும், வீடுகளின் கூரைகள் அசைந்ததாகவும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

பேருவளையின் புறநகர் பகுதிகளான பொல்கொட்டுவ, பயாகல பினிதிய முல்ல, வனிவல் கட்டிய ஆகிய கிராமங்களில் உள்ள ஏராளமான வீடுகளில் நிலநடு க்கம் உணரப்பட்டுள்ளது.

# கண்கூடாக பார்வையிட்டு...

குறித்த பிரதேசத்தில் இடம்பெறும் விடயங்களை பார்வையிட்டு, ஏற்கெனவே இருந்த நிலையை விட புதிதாக கட்டடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றனவா, அல்லது மேம்படுத்தல் செய்யப்பட்டிருக்கின்றனவா என்பதனைப் பார்வையிட்டு, கட்டளை பிறப்பிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலையில் நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்தவிகாரை அமைக்கும் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக குருந்தூர்மலை ஆதிசிவன் ஐயனார் ஆலயத்தினரால் மார்ச் 2ஆம் திகதியன்று நீதிமன்றில் மன்றில் முறையீடு செய்யப்பட்டது.

இந் நிலையில் குருந்தூர்மலை விவகாரத்தில் அவ்வாறு நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸார் மற்றும், தொல்லியல் திணைக்களம் ஆகிய தரப்பினர் மார்ச் 30ஆம் திகதியன்று நீதிமன்றில் தோன்றி தமது அறிக்கைகளை சமர்ப்பிக்கவேண்டுமென முல்லைத்தீவு மாவட்ட நீதவான் ரி.சரவணராஜா உத்தரவிட்டிருந்தார்.

குறித்த வழக்கு முல்லைத்தீவு மாவட்ட நீதவான் ரி.சரவணராஜா முன்னிலையில் வியாழக்கிழமை (30) எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது தமது சிரேஷ்ட சட்டத்தரணிகளும், சிரேஷ்ட அலுவலர்களும் நீதிமன்றுக்கு வரமுடியாத காரணத்தினால், தமது விளக்கங்களைச் சமர்ப்பிப்பதற்கு பிறிதொரு தவணையினை வழங்குமாறு பொலிஸாரும் தொல்பொருள் திணைக்களம் சார்ந்தவர்களும் நீதிமன்றிடம் விண்ணப்பம் செய்திருந்தனர்.

இந் நிலையில் குருந்தூர்மலைப் பிரதேசத்திலே நீதிமன்றக் கட்டளையை மீறி பௌத்த விகாரைக்குரிய கட்டுமானப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுவதானது, நீதிமன்றத்தை அவமதித்து இடம்பெறுகின்ற செயற்பாடு என, ஆலயம் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அத்தோடு பொதுமக்கள் நீதிமன்றின் மேல் வைத்திருக்கின்ற நம்பிக்கையைக் கேள்விக்கு ள்ளாக்கக்கூடியதொரு செயற்பாடு எனவும் இதன்போது ஆலய நிர்வாகம் சார்பான சட்டத்தரணிகளால் சுட்டிக்காட்டப்பட்டது.

அதனடிப்படையில் இருதரப்பு சமர்ப்பணங்களைத் தொடர்ந்து தொல்லியல் திணைக்களம் மற்றும், பொலிஸாரின் அறிக்கைகள் சமர்ப்பிப்பதற்காக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 27ஆம் திகதி வழக்குத் திகதியிடப்பட்டுள்ளது.

# பேக்கரிகளுக்கு இந்திய முட்டை

தலா 35 ரூபாய் என்ற விலையில் 10 இலட்சம் முட்டைகளை அரச வர்த்தக கூட்டுத்தாபனம், பேக்கரி உரிமையாளர்களுக்கு வழங்கியதாகவும் நாட்டின் அரச நிறுவனத்தின் அங்கிகாரத்துடன் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மார்ச் 18ஆம் திகதி உற்பத்தித் திகதி இடப்பட்டுள்ள முட்டைகளில் காலாவதித் திகதி 2023ஆம் ஆண்டு ஜூன் 15ஆம் திகதி நிறைவடைவதாக குறிப்பிடப்பட்டிருந்தது.

எதிர்காலத்தில் இலங்கையில் உள்ள பேக்கரிகள், ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு முட்டைகளை இறக்குமதி செய்யவுள்ளதாக தெரிவித்த ஜயவர்தன, எதிர்காலத்தில் பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலை குறைய வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கையின் முட்டை உற்பத்தியாளர்களும் இப்போது போட்டி விலையில் முட்டைகளை விற்பனை செய்ய ஆரம்பிக்க வேண்டும் என்றும் சுட்டிக்காட்டிய அவர், நுகர்வோருக்காகச் செயற்பட்ட வர்த்தக அமைச்சர் மற்றும் அதிகாரிகளுக்கு நன்றி தெரிவித்தார்.

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட 20 இலட்சம் முட்டைகளும் கடந்த 23 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த நிலையில், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் புதன்கிழமை (29) அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இரு மனுக்களும்...

திறைசேரி செயலாளருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார மற்றும் தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் ஆகியோர் நீதிமன்ற அவமதிப்பு மனுக்களை கடந்த 21ஆம் திகதி தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த மனுக்கள், பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் நீதியரசர்களான புவனேக அலுவிஹாரே, பிரியந்த ஜயவர்தன, விஜித் மலல்கொட மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகியோர் அடங்கிய ஐவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

அதன்போது, சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் நீதிமன்றத்தில் உண்மைகளை முன்வைத்ததுடன், மனுக்கள் குறித்த பல ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு மேலும் கால அவகாசம் கோரினார். அதனையடுத்தே மேற்குறிப்பிட்ட பரிசீலனைத் திகதி அறிவிக்கபபட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்காக 2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்ட நிதியை நிறுத்தி வைப்பதைத் தடுத்து நிதியமைச்சின் செயலாளருக்கு உயர் நீதிமன்றம் கடந்த 3ஆம் திகதி இடைக்கால உத்தரவு பிறப்பித்திருந்தது.

நிதியமைச்சின் செயலாளர் இடைக்கால உத்தரவை பின்பற்றாமல் நீதிமன்றத்தை அவமதித்துள்ளதாக சுட்டிக்காட்டியே இந்த இரு மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

அரசியலமைப்பின் 105(3) பிரிவின் கீழ் நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்காக திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன மீது குற்றம் சுமத்த உத்தரவிடுமாறு மத்தும பண்டார மற்றும் விஜித ஹேரத் ஆகியோர் தமது மனுக்களில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# ஆளுநரின் நடவடிக்கையை...

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "புன்னைக்குடா வீதி" என்ற பெயருடன் பயன்படுத்தப்படும் இவ்வீதியானது ஏறாவூர்; நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள மணிக்கூட்டுக் கோபுர சந்தியில் ஆரம்பித்து சுமார் 5.23 கிலோமீற்றர் நீண்டு சென்று புன்னைக்குடா கடற்கரையில் முடிவடைகின்றது.

இவ் வீதி அமைந்துள்ள பிரதேசம் முழுவதிலும் 99 சதவீதமாக தமிழ் முஸ்லிம் மக்களே நிறைந்து வாழ்கின்றனர்.

இவ் வீதிக்கு பெயரிடக்கூடிய எத்தனையோ தமிழ், முஸ்லிம் பிரமுகர்கள் இப்பிரதேசத்தில் வாழ்ந்து மறைந்த போதிலும் இதில் யாரேனும் ஒரு தனிநபரின் பெயரைச் சூட்டுவதன் மூலம் ஓர் இன மக்கள் மனம் நொந்து கொள்வார்கள் என்பதால்; பொதுவான "புன்னைக்குடா வீதி" என்ற பெயரையே மிக நீண்டகாலமாகவே பயன்படுத்தி வருகின்றனர்.

இலங்கையின் வரைபடத்திலும் ஆங்கிலேயர் ஆட்சிக்கால காணி உறுதிகளிலும் இவ் வீதி புன்னைக்குடா வீதி என்ற பெயரிலேயே குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் தென்பகுதியைச் சேர்ந்த சுனில் ஆரியபால என்பவரின் தலைமையில் சிலர் ஒப்பமிட்டு கிழக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றின் மூலம் மிகப் பழைமை வாய்ந்த புன்னைக்குடா வீதி என்னும் பெயரை எல்மிஸ் வல்கம "Elmis Walgama" என பெயர் மாற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண ஆளுநரும் இதனைக் கவனத்தில் கொண்டு சில தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது. ஆளுநரின் செயற்பாட்டை நாங்கள் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றோம்.

எனவே தயவுசெய்து தாங்கள் இவ்விடயத்தில் கரிசனை செலுத்தி, இப்பகுதியில் இன நல்லுறவுக்கு குந்தகம் ஏற்படுத்தும் இவ் வீதிப் பெயர்மாற்ற நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தி தொடர்ந்தும் புன்னைக்குடா வீதி என்னும் பெயரிலேயே இவ்வீதி அழைக்கப்படவும், சகல இன மக்களின் நல்லுறவு பேணப்படவும் வழிசமைக்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்கின்றோம்." என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.இதே கடிதம் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏனைய தமிழ், முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# தங்கமும் டொலரும் உயர்ந்தன

இதேவேளை, 175 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு பவுண் 24 கரட் தங்கத்தின் விலை 3 ஆயிரம் ரூபாய் அதிகரித்து 178 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டதாக தெரியவருகிறது. இதேவேளை, இலங்கை மத்திய வங்கியினால் வியாழக்கிழமை (30) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களில் அடிப்படையில் ரூபாய்க்கு நிகரான அமெரிக்க டொலர் ஒன்றின் பெறுமதி அதிகரித்துள்ளது.

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 317 ரூபாய் 72 சதமாகவும் விற்பனை விலை 335 ரூபாய் 41 சதமாகவும் பதிவாகியுள்ளதுடன், கடந்த 5 நாட்களாக டொலரின் பெறுமதி அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கூட்டத்தில் அமளி துமளி: களேபரத்தில் பெண் காயம்

மேலும், அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஏற்பட்ட அமளி துமளியைத் தொடர்ந்து இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் மற்றும் இரா.சாணக்கியன் எம்.பி ஆகியோர் வெளிநடப்புச் செய்தனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட ட அபிவிருத்திக்குழு கூட்டம் வியாழக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த நிலையில் காலை 9 மணிக்கு வாகரை பிரதேசத்தில் இல்மனைற் அகழ்வு, வாகனேரியில் சூரிய மின்சார திட்டத்துக்கு 352 ஏக்கல் வயல் காணியை அபகரிப்பு, மயிலத்தைமடு மேச்சல் தரை காணி அபகரிப்பு போன்ற பல்வேறு காணிகளை அபிவிருத்தி என்ற பேர்வையில் அபகரிப்பை நிறுத்த கோரி பொதுமக்கள் மாவட்ட செயலக்குக்கு முன்னால் ஒன்று திரண்டனர்.

இதனையடுத்து ஒன்று திரண்ட பொதுமக்களுடன் இரா. சாணக்கியன் எம்.பி மாவட்ட அரசாங்க அதிபர் காரியாலயத்தை நோக்கி ஆர்பாட்ட பேரணியாக சென்ற நிலையில் அவர்களை காரியாலய பகுதிக்கு செல்லவிடாது பொலிஸார் தடுத்து நிறுத்த முயன்றனர்.

இதன் போது அதனை மீறி ஆர்ப்பாட்டக்காரர்கள் உட் செல்ல முற்பட்டபோது அதனை பொலிஸார் தடுக்க முற்பட்ட நிலையில் காயமடைந்த பெண் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

அதனையும் மீறி மாவட்ட செயலக பகுதிக்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் உள் நுழைந்தையடுத்து அங்கு பற்றநிலை ஏற்பட்ட நிலையில், மாவட்ட செயலகத்துக்குள் உள் நுழையும் கோட்டை கதவையும் மூடிய பொலிஸார் உட்செல்ல விடாது தடுத்தால் கதவின் முன் அமர்ந்து ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதனையடுத்து பாதுகாப்பு கடமைக்கு மேலதிக பொலிஸார் வரவழைத்து பாதுகாப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

கூட்டத்துக்கு வருகை தந்திருந்த இராஜாங்க அமைச்சர் எஸ். வியாழேந்திரன் ஆர்ப்பாட்ட காரருடன் இணைந்து ஆர்பாட்த்தில் ஈடுபட்ட நிலையில் கூட்டத்துக்கு வருகை தந்திருந்த சில அதிகாரிகள் மற்றும் அங்கு கடமையாற்றும் ஊத்தியோகத்தர்கள் காரியாலயத்துக்கு செல்லவோ காரியாலத்தில் இருந்து வெளியேற முடியாமல் ஆர்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிலையில் அரசாங்க அதிபருடன் பொலிஸார் கலந்துரையாடி நிலையில் கூட்டத்துக்கு செல்வதற்கு இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன், இரா.சாணக்கியன் எம்.பி மற்றும் அதிகரிகள் மற்றும் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை உட்செல்ல அனுமதித்தனர்.அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் காணி தொடர்பாக அரசாங்க அதிபரிடம் இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் வினவியபோது, காணி குறித்து எங்களுக்கு தொடர்பில்லை அது பிரதேச செயலகங்களிடம் கேட்குமாறு தெரிவித்ததையடுத்து அவர் பல வாதப் பிரதாபங்களின் மத்தியில் இங்கு மக்களுக்கு தீர்வு கிடைக்காது என்று தெரிவித்து கூட்டத்தில் இருந்து இராஜாங்க அமைச்சர் இடை நடுவில் வெளியேறினார்.

இராஜாங்க அமைச்சரும் அபிவிருத்தி குழு தலைவருமான சி.சந்திரகாந்தனிடம் காணி அபகரிப்பு தொடர்பாக குற்றச்சாட்டுக்களை முன்வைத்து வாக்குவாதத்தில் இரா. சாணக்கியன் ஈடுபட்டார்.

அபிவிருத்திகுழு தலைவர், அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த ஊடகவியலாளர்களை அவமதித்து பேசியதுடன் அமளி துமளி ஏற்பட்டதையடுத்து இரா.சாணக்கியன் இடைநடுவில் அங்கிருந்து வெளியேறி வெளிநடப்பு செய்ததையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் முற்பகல் 11.30 மணிக்கு கலைந்து சென்றனர்.

# தாக்குதல் நடத்திய 4 பேர் கைது

மாணவர்களைத் தாக்கி காயப்படுத்திய தாக குற்றம் சுமத்தப்பட்ட குறித்த நால்வரும் பலாங்கொடை நீதவான் நீதிமன்றில் புதன்கிழமை (29) ஆஜர்படுத்தப்பட்ட நிலையில் அவர்களுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.கடந்த பெப்ரவரி மாதம் 15ஆம் திகதி சபரகமுவ பல்கலைக்கழக விடுதிக்குள் நுழைந்து புதிய மாணவர்கள் மீது தாக்குதல் மேற்கொண்டிருந்ததுடன் சம்பவத்தில் காயமடைந்த 9 பேர் பலாங்கொடை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.மேலும், பெப்ரவரி 16ஆம் திகதியுடன் முதலாம் ஆண்டு மாணவர்களைத் தவிர ஏனைய மாணவர்களுக்கு பல்கலைக்கழகம் மூடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# கட்டணங்கள் 10% குறையும்

42 மற்றும் 59 ஆசனங்களைக் கொண்ட பஸ்களை, கிடைக்கும் எரிபொருள் கோட்டாவின் மூலம் தொடர்ச்சியாக இரண்டு நாட்களுக்கு சேவையில் ஈடுபடுத்த முடியாது என சுட்டிக்காட்டினார்.

குறைந்தபட்ச எரிபொருளாக வேன்களுக்கு 40 லீற்றரும் பஸ்களுக்கு 100 லீற்றரும் வழங்கப்பட வேண்டும் என அவர் எரிசக்தி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்த அவர், தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் பட்சத்தில் கட்டணம் குறைக்கப்படும் என்றார்.

# மனித உரிமை இணைப்பாளர் ஆலயத்தை பார்வையிட்டார்

ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் வைக்கப்பட்ட சிவன் சிலைகள் மற்றும் வழிபாட்டு பொருட்கள் உடைத்து எறியப்பட்ட சம்பவம் தொடர்பில் ஆலய நிர்வாகத்தினரால் வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதற்கு அமையவே ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளரினால் குறித்த விஜயம் மேற்கொள்ளப்பட்டுள்ளளது

வெடுக்குநாறி மலைக்கு செல்வதற்கு முன்னர் நெடுங்கேணி பொலிஸ் நிலையத்திற்கு சென்று பார்வையிட்டு தகவல் அறிந்து கொண்ட அவர், வெடுக்குநாறி மலைக்கு சென்று ஆலய சூழல் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் நேரடியாக ஆராய்ந்துள்ளார்.

வெடுக்குநாறி மலை தொடர்பில் மனித உரிமைய ஆணைக்குழுவின் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

# அனைத்து குடும்பங்களுக்கும்...

சர்வதேச நாணய நிதியத்துடன் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. அதன் மூலம், நாட்டில் நிதியை திரட்டிக்கொள்வதற்கான பல்வேறு வழிகள் திறக்கப்பட்டிருக்கின்றது. அதன் மூலம் நாடு வங்குரோத்து நிலையில் இருந்து ஒரு சில படிகள் மீண்டெழுந்திருக்கின்றது.

உண்மையாகவே வறுமைநிலைக்கு உட்பட்டிருக்கின்ற குடும்பங்களை இனங்காண வேண்டும். வெறுமனே, சமூர்தி பெரும் குடும்பங்கள் மட்டும் வறுமை நிலையில் உள்ளது என கொண்டு நிவாரணங்கள் வழங்குவது பொருத்தமற்றது.

சமூர்தி வழங்கல் தொடர்பான நியதிகள் காரணமாக தோட்ட பகுதியில் உள்ள மக்கள் மிக குறைந்த அளவிலேயே உள்வாங்கப்பட்டுள்ளனர். எனினும், நாட்டின் வறுமை நிலை மிக உயர்வாக இருப்பது மலையக தோட்ட பகுதிகளில் என்பதனை புள்ளி விபரங்கள் தெளிவாக காட்டுகின்றது. எனவே, கிராமப்புரங்களை போல் தோட்ட பகுதிகளுக்கும் பாராபட்சம் இன்றி நிவாரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

தற்போது 10 கிலோ அரிசி நிவாரணமாக வழங்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதில் மலையக தோட்ட பகுதிகளில் வாழும் அனைத்து குடும்பங்களும் உள்வாங்கப்பட வேண்டும். தோட்ட பகுதிகளில் உள்ள அனைத்து குடும்பங்களுமே இன்று வறுமை நிலைக்கு தள்ளப்பட்டு இருக்கின்றது. அவ்வாறான சூழலில் தெரிவுசெய்யப்பட்ட சில குடும்பங்களுக்கு மட்டும் நிவாரணம் வழங்குவது பொருத்தமற்றது.அது மட்டும் அன்றி மக்களின் அதிருப்த்தி பல்வேறு தரப்பினர் இடையில் மோதல் நிலையை தோற்றுவிப்பதாகவும் அமைந்துவிடும். எனவே, மக்களின் உண்மை நிலையை அறிந்து மனிதாபிமான அடிப்படையில் நிவாரணங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும்" என்றார்.



ஈழத்து பழனியில்

# நள்ளிரவில் மூலிகை குளியல்

## உடலும் உள்ளமும் மகிழ, சித்தர்கள் கண்ட வழிமுறை

'விபுலமாமணி' வி.ரி சகாதேவராஜா

'ஈழத்து பழனி' என அழைக்கப்படும் கிழக்கில் சித்தாண்டி வேலோடும் மலை முருகன் ஆலயத்தில், மூலிகை குளியல் மற்றும் மகாயாகம் அண்மையில் நடைபெற்றன. இதனை, சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி தலைமையிலான குழுவினர் மேற்கொண்டிருந்தனர்.

மூலிகை குளியல் சரியாக நள்ளிரவு 12 மணியளவில் இடம்பெற்றது. சுமார் நூறு பக்தர்கள் குளியலில் ஈடுபட்டிருந்தார்கள். குளியலுக்கு பின்னர் துவாயால் துடைப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

குளியலில் உள்ளடக்கப்பட்டிருந்த மூலிகைகள் உடலில் உள்ள எதிர்மறை சக்திகளை போக்குவதற்கு உதவும் என்பதால், மூலிகை குளியல் மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றது.

மூலிகைக் குளியலின் மகத்துவம் குறித்து, சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ்தான குரு சிவசங்கர் ஜி கூறயதாவது:

"சித்தர்கள்தான் நல்ல மூலிகை, கெட்ட மூலிகை இரண்டையும் உருவாக்கியவர்கள். தேவலோக கன்னியர்களான ஊர்வசி, ரம்பை ஆகியோருக்கு கோரக்கர் முனிவர் இட்ட சாபத்தால், மதியை மயக்கக்கூடிய புகையிலை என்ற மூலிகையும் கஞ்சா என்ற மூலிகையும் உருவாக்கப்பட்டன. கஞ்சாவுக்கு 'கோரக்கர் மூலிகை' என்றும் பெயர் உள்ளது. ஆகவே, அத்தகைய மூலிகைகளை கொண்டு தயாரிக்கின்ற குளியல் முறைமை மகத்துவமானது. உடல் ஆரோக்கியத்துக்கு முக்கியமானது.

சக்தி வாய்ந்த மூலிகைகளை கொண்டு தயாரிக்கின்ற நீரை, இளஞ்சூட்டில் உடம்பில் ஊற்றும் போது, அங்கு அபூர்வமான சக்திகள் உண்டாகும். சித்தர்கள், முனிவர்கள், முன்னோர்கள் போன்றோர் அன்று உருவாக்கிய இந்த மூலிகை குளியல், இன்னும் தொடர்கிறது.

தற்போதைய ஐந்து நட்சத்திர நவீன ஹோட்டல்களிலும் மூலிகை குளியல் நடைமுறையில் உள்ளது. ஒருவருக்கு ஒரு குளியலுக்கு 25 ஆயிரம் ரூபாய் வரையில் அறவிடப்படும் அளவிற்கு அதன் பெறுமதி முக்கியத்துவம் மேலோங்கி நிற்கிறது. உண்மையில் இத்தகைய மூலிகை குளியல் என்பது, எமது முன்னோர்கள் இயற்கையோடு இணைந்து உருவாக்கியது ஆகும்.

இங்கு 18 வகையான மூலிகைகள் குளியலுக்கு உகந்தனவாகும். அவையாவன, ஆல், அரசு, அத்தி, இத்தி, வன்னி, நாயுருவி, மஞ்சள், சந்தனம், அறுகு, வில்வம், தேவதாரு, கருங்காலி, சந்தனம், அகில் போன்ற இன்னும் சில மூலிகைகள் இடப்படும்.

அது மாத்திரமல்ல, எட்டு வகையான வாசனைத் திரவியங்களும் இடப்படும் . அவையாவன: புனுகு, ஜவ்வாது, குங்குமம், கோரோசனை, பச்சைமஞ்சள், பன்னீர், செஞ்சந்தனம், கஸ்தூரி போன்ற எட்டு வகையான வாசனைத் திரவியங்கள் இடுவார்கள். ஒன்பது கிரகங்களுக்குரிய தானியம் மற்றும் பூக்கள் இடுவதும் வழக்கம்.

இவற்றைவிட பால், தயிர், நெய், கோசலம், கோமயம் போன்ற பஞ்சகௌவியங்கள் மற்றும் ஏலம், கறுவா, வால் மிளகு போன்ற திரவியங்களுடன் எலுமிச்சம்பழம் இட்டு, தண்ணீரில் சிலமணி நேரம் சுட வைக்க வேண்டும். பின்னர் இளம் கொதிநீரில் இவற்றைச் சேர்த்துக் குளிக்க வேண்டும். மூலிகைக் குளியலின்போது சவர்க்காரம் பாவிப்பது தவறு.

உடம்புக்கு புத்துணர்ச்சி கிடைக்கும்; உள்ளம் புளகாங்கிதத்தை உணரும். பொதுவாக வாரம் ஒரு முறை அல்லது மாதம் ஒரு முறை மூலிகை குளியலை செய்தால், உடல் ஆரோக்கியம் பெறும்.

இலகுவாக வீட்டில் எளிய முறையில் மூலிகைக் குளியல் செய்வதானால், கல் உப்பு, மஞ்சள் என்பவற்றைக் கலந்து, தண்ணீரை சுடவைத்து, வெது வெதுப்பான நீரில் குளிக்கலாம். எங்காவது போய் வந்தால், கண் திருஷ்டிபடும்; இந்த எளிய முறையில் குளித்தால், 10 நிமிடத்தில் கண் திருஷ்டி பறந்து விடும்.





### மூலிகை குளியல் தூள்

பொதுவாக மூலிகை குளியல் தூள் இந்தியாவிலும் இலங்கையிலும் பயன்படுத்தப்படுகிறது. இதைத் தயாரிக்க தேவையான பொருட்கள்: சந்தனம், அகில், அதிமதுரம், மரிக்கொழுந்து, துளசி, கஸ்தூரி மஞ்சள், ரோஜா இதழ்கள், வெட்டி வேர், ஜாதிக்காய், திரவியப்பட்டை, மகிழம் பூ, ஆவரம் பூ, வேம்பு, செம்பருத்தி பூ, பூலான் கிழங்கு, கோரைக்கிழங்கு, கார்போகரசி, விளாமிச்சை, தோடம்பழத்தோல், பச்சை பயறு, கடலை பருப்பு என்பவையாகும்.

இயற்கை மூலிகை குளியல் தூளைத் தினமும் தேய்த்துக் குளித்துவந்தால், முகப்பருக்கள் மற்றும் முகப்பருவால் ஏற்படும் கரும்புள்ளிகள், தழும்புகள் மறைந்து, முகம் மென்மையாக மாறும். அத்துடன், உடலும் பளிச்சென மின்னுவதுடன் பொலிவும் பெறும் .

தோல் நோய்கள், தேமல், வியர்வை நாற்றம், தேவையற்ற முடிகள் போன்றவற்றை நீக்கும்.

அதுமட்டுமின்றி சில ஆண்களுக்கும், பெண்களுக்கும் உடலில் வரி வரியாக இருக்கும்; சிலருக்கு தோள்பட்டையிலும் முதுகுப் புறங்களிலும் பரு போன்ற சிறு கட்டிகள் இருக்கும். தினமும் இந்தத் மூலிகைத் தூளை உபயோகித்து குளித்து வர, சிறு கட்டிகளும் வரிகளும் மறைந்து போகும்.

இயற்கை மூலிகை குளியல் தூளை பாலில் கலந்து பசைபோல் செய்து முகம், கழுத்து போன்ற கருமையான பகுதிகளில் தடவி, சிறிது நேரம் மசாஜ் செய்து ஊற வைத்து கழுவினால், சருமத்தில் உள்ள இறந்த செல்கள் மற்றும் அழுக்குகள் நீங்கி முகம் வெண்மையாக காணப்படும்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். எனவே மூலிகை குளியல் மூலம் எமது உடலை ஆரோக்கியமாக வைத்திருக்கும் அதேவேளை, மனதையும் உறுதியாக வைத்திருக்கலாம் என்பது அனுபவவாயிலாக கண்டறிந்த உண்மையாகும்" என்றார்.

# தவறிழைக்கும் மாணவர்களுக்கு விடுகைப்பத்திரம் வழங்கமுடியாது

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தீர்மானம்

பாடசாலைகளில் ஒழுக்கத்துக்கு மாறாக செயற்படுகின்ற அல்லது தவறிழைக்கின்ற மாணவர்களுக்கு தண்டணையின் ஒரு பகுதியாக விடுகைப் பத்திரத்தை வழங்குவதை, பாடசாலை அதிபர்கள் தொடர்ச்சியாகப் பின்பற்றி வருவதால், அவ்வாறு விடுகைப் பத்திரத்தை வழங்கி பாடசாலையிலிருந்து வெளியேற்றப்படும் மாணவர்கள், சமூகத்தில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்களாக இனங்காணப்படுகின்றனர் என, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கு உரிய நடவடிக்கைகளை பின்பற்றாமல், அதிபர்கள் எதேச்சையாக பாடசாலை விடுகைப்பத்திரங்களை வழங்குவது தொடர்பாக, மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கும் கிடைக்கப்பெறுகின்ற முறைப்பாடுகள் தொடர்பாக, வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு உட்பட்ட வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் புதன்கிழமை (22) கலந்துரையாடல் நடைபெற்றது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தின் பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் தலைமையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் வடக்கு மாகாண கல்வித் திணைக்களம், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள வலயக்கல்வி அலுவலக சட்ட வைத்திய நிபுணர், சிறுவர் நன்னடத்தை மற்றும் பராமரிப்புத் திணைக்களம், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, மாவட்ட சிறுவர் மேம்பாட்டு பிரிவு ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்குப்பற்றியிருந்தனர். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தவறிழைத்த மாணவர் தொடர்பில் பாடசாலை ஒழுக்காற்றுக் குழுவைக் கூட்டி, பாடசாலையிலிருந்து இடைவிலகாத வகையில் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமே தவிர, மாணவர்களுக்கு விடுகைப்பத்திரம் வழங்கும் அதிகாரம், கல்வி அமைச்சின் 2016/12 ஆம் இலக்க சுற்றுநிரூபத்தின் பிரகாரம் அதிபர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே, அதிபர்கள் ஒழுக்காற்று நடவடிக்கை என்ற பெயரில், மாணவர்களுக்கு விடுகைப்பத்திரத்தை வழங்குவதானது அதிபர்கள் தமக்கு கையளிக்கப்படாத அதிகாரத்தை செயற்படுத்துவதாகும். எனவே இது அதிகார வரம்புமீறல் ஆகும்.

மேலும், குறித்த சுற்றுநிரூபத்தின்படி, ஒரு மாணவன் தொடர்பில் ஒழுக்க மீறலுக்கு உட்பட்ட மாணவனை அப்பாடசாலையில் தொடர்ந்து வைத்திருப்பதா அல்லது இன்னொரு பாடசாலைக்கு குறித்த மாணவனை இணைப்பதா என்ற தீர்மானத்தை மேற்கொள்வது வலயக் கல்விப்பணிப்பாளருடைய கடமை மற்றும் பொறுப்பு என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே வலயக் கல்விப் பணிப்பாளர், இந்த விடயத்தில் கரிசனையோடு செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. இக்கலந்துரையாடலின் இறுதியில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. பாடசாலை மாணவர்களுக்கு ஒழுக்காற்றுக் கட்டளையின் ஒரு பகுதியாக அதிபர்களால் விடுகைப் பத்திரத்தை வழங்குவது மேற்கொள்ளாதிருக்க அதிபர்களுக்கு உரிய அறிவுறுத்தல் வழங்கல்.

2. மாணவர்களை அப்பாடசாலை சூழலில் வைத்திருக்க முடியாத நிலை ஏற்பட்டு இருக்கின்றது எனின் அவ்விடயம் வலயக் கல்விப் பணிப்பாளரின் கவனத்துக்கு அதிபர்களால் கொண்டுவரப்படுதல் வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் மாணவரது கல்வி உரிமையை பறிக்கும் வகையில், அதிபர்களால் விடுகைப்பத்திரம் தன்னிச்சையாக வழங்கப்பட முடியாது.

3. பெற்றோர் சுயவிருப்பத்தின் பேரில் மாணவர்களது விடுகைப்பத்திரத்தைக் கோரினாலும் கூட, அம் மாணவன் வேறொரு பாடசாலையில் அனுமதியைப் பெற்றுள்ளமையை உறுதிப்படுத்திய பின்னரே அம்மாணவனது விடுகைப்பத்திரம் வழங்குவது தொடர்பில் தீர்மானிக்க வேண்டும்.







# சவூதியின் இப்தாரில் ஈரான் தூதுவர்

கொழும்பில் உள்ள சவூதிஅரேபியத் தூதராலயம் ஏற்பாடு செய்திருந்த இப்தார் நிகழ்வு, காலிமுகத்திடல் ஹோட்டலில் செவ்வாய்க்கிழமை (28) நடைபெற்றது.

சவூதி அரேபியாவின் இலங்கைத் தூதுவர் காலித் ஹமூத் அல் கத்தாணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முதன்முறையாக இலங்கையில் உள்ள ஈரானியத் தூதுவர் கலந்து கொண்டிருந்தார்.

அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், முஸ்லிம் இயக்கங்களின் பிரதிநிதிகள், இராஜதந்திரிகள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

எம்.எஸ்.எம் ஸாகிர்

# உச்சத்தில் இருக்கையில் 'கொஹில' வுக்கு மவுசு

2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதார நெருக்கடி உச்சத்தில் இருந்த கால கட்டத்தில் கொஹில கிழங்கின் விற்பனை 40% ஆல் கூடியுள்ளதாக ஹெக்டர் விவசாய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட அறிக்கை தெரியப்படுத்துகிறது.

பெரும்பாலான மக்கள் உணவுக்காக தம்முடைய இயலுமைக்கேற்றவாறு காய்கறிகளை பயன்படுத்தியுள்ளதாகவும் அதற்கேற்ப அவரையின் நுகர்வு 10% இனாலும் கரட்டின் நுகர்வு 29% இனாலும் பூசணிக்காயின் நுகர்வு 27% இனாலும் கத்தரிக்காயின் நுகர்வு 27% இனாலும் இலைக் காய்கறிகளின் நுகர்வு 10% இனாலும் குறைந்துள்ளதாக குறித்த அறிக்கை விபரிக்கின்றது.

இலங்கை சனத்தொகையில் 86 சதவீதமான மக்கள் உணவுக்காகப் பயன்படுத்தப்படும் உணவு வகைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதால், தங்கள் உணவுமுறையை மாற்றிக்கொண்டதுடன் இன்னுமொரு 75 சதவீத மக்கள் உணவைத் தயாரிக்கப் பயன்படுத்தும் உணவு பொருட்களைக் குறைத்துள்ளனர். அதேபோல் 45% மக்கள் உணவு உண்ணும் வேளைகளைக் குறைத்துள்ளதுடன் 38% பேர் உண்ணும் உணவின் அளவைக் குறைத்துள்ளனர்.

அண்மையில் செய்யப்பட்ட பல்வேறு ஆய்வுகளின் ஆய்வறிக்கைகளை ஹெக்டர் கொப்பகெடுவ விவசாய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் புதன்கிழமை (29) வெளியிட்டது.

நகர்புறத்தில் 43% மக்களும் கிராமபுறங்களில் 52% சனத்தொகையும் பெருந்தோட்டத்துறையில் 67% மக்களும் உணவு பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கை தெரிவிக்கிறது.

2021 செப்டெம்பர் மாதத்திலிருந்து 2022 முடிவு வரையில் இலங்கையின் உணவு ஒவ்வாமை 95 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இலங்கை சுதந்திரம் அடைந்த பின் ஏற்பட்ட மிகவும் பாரதூரமான பொருளாதார நெருக்கடி இதுதான் என அறிக்கை தெரிவிக்கிறது.

ஊட்டச்சத்தை பொறுத்தளவில் நகர, கிராம மற்றும் பெருந்தோட்டப்பகுதிகளில் முறையே 25%, 03% மற்றும் 7 சதவீதமான மக்கள் புரதச் சத்தைப் பெற்றுக் கொள்ளவில்லை.

மேலும் 78 சதவீதமான பெருந்தோட்ட மக்கள் தமது உணவில் மீன் மற்றும் இறைச்சியை சேர்த்துக் கொள்ளவில்லையென அறிக்கை தெரிவித்துள்ளது.

# அன்னப்பட்சி வாகனத்தில் அம்பாள்



திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த பிரமோற்சவத்தின் நான்காம் நாள் (வியாழக்கிழமை – 30) திருவிழாவில் அம்பாள் அன்னப்பட்சி வாகனத்தில் எழுத்தருளி அருள் காட்சி வழங்குவதை காணலாம்.

(படம்: அ. அச்சுதன்)

# சரஸ்வதி மண்டபத்தில் புத்தாண்டு மலிவு விற்பனை

கொழும்பு மகளிர் இந்து மன்றத்தின் சித்திரை புத்தாண்டு மலிவு விற்பனை, பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில், ஏப்ரல் முதலாம் திகதி சனிக்கிழமை, காலை 10 மணி முதல் மாலை ஆறு மணி வரை இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் உணவுப் பொருட்கள், சேலைகள், ஆடைகள், அழகுசாதனப் பொருட்கள் என்பன மலிவு விலையில் விற்பனை செய்யப்படவுள்ளதுடன், விசேட நிகழ்வுகளும் அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பும் நடைபெறவுள்ளன.

15/1, பகதலே வீதியில், கொழும்பு மகளிர் இந்து மன்றம் நடத்திவரும் 'அன்பு இல்லம்' என்ற முதியோர் இல்லத்துக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுக்கும் பொருட்டே, இந்த மலிவு விற்பனை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# நிந்தவூரில் இராணுவ முகாமை அகற்றும் நடவடிக்கை

■ பாறுக் ஷிஹான்

அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்குள் நிந்தவூர் பிரதேச சபை முதலிடம் பெற்றமையால் கிடைக்கப்பெற்ற பரிசுத் தொகையான 100,000 அமெரிக்க டொலர் நிதியைக் கொண்டு நிந்தவூர் பிரதேச சபையின் பழைய கட்டடம் அமைந்துள்ள இடத்தில், பன்னை தொழிலாளர்களின் மேம்பாட்டுக்கான வர்த்தக கட்டட தொகுதியை அமைப்பதற்கான முன்னெடுப்புகள் இடம்பெற்று வருகின்றன.

இதனடிப்படையில் பிரதேச சபையின் பழைய கட்டடத்தில் அமைந்திருக்கின்ற இராணுவ முகாமை அகற்றும் பொருட்டு, புதன்கிழமை (29) அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆனையாளர் எஸ்.எல்.ஏ



கமல் நெத்மினி, அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபரை நேரில் அழைத்து வந்து பார்வையிட்டிருந்தனர்.

இதன் போது இராணுவ உயரதிகாரி, அம்பாறை உதவி பொலிஸ் அத்தியட்சகர், நிந்தவூர் பிரதேச செயலாளர் ஏ.எல். அப்துல் லதீப், நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம்.ஏ.எம் அஷ்ரப் தாஹிர் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.



சேர்கிள் நிறுவனத்தால்

## தொழில் முயற்சியாளர்கள் கௌரவிப்பு

■ வ. சக்தி

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏறாவூர் பற்று, மண்முனை மேற்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட இளம் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களில், வளர்ந்து வருகின்ற இளம் பெண் தொழில் முயற்சியாளர்களை கௌரவிக்கும் நோக்கில் 'சேர்கிள்' இளம் பெண்கள் அமைப்பு ஒழுங்கு செய்த விசேட நிகழ்வு சேர்கிள் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அஜானி காசிநாதர் தலைமையில் மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ மண்டபத்தில் செவ்வாய்கிழமை (28) இடம்பெற்றது.

இந்நிகழ்வின் போது யுனப்ஸ் (UNOPS) நிறுவனத்தின் அனுசரணையுடன் சேர்கிள் நிறுவனத்தால் நடத்தப்பட்ட வியாபாரத் திட்டம், இயற்கை முறை விவசாயம் தொடர்பான பத்து நாள்கள் கொண்ட பயிற்சி நெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த 30 இளம் பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.



## விவாகப் பதிவாளராக நியமனம்

■ எச்.எம்.எம் பர்ஸான்

கோறளைப்பற்று வாழைச்சேனை, தியாவட்டவான் பதிவாளர் பகுதிக்கான முஸ்லிம் விவாகப் பதிவாளராக மௌலவி ஏ.ஜீ சாதிக்கீன் மதனி நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கான நியமனக் கடிதத்தை மட்டகளப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கலாமதி பத்மராஜா செவ்வாய்க்கிழமை (28) வழங்கி வைத்தார்.

## பாடசாலை காணிகள் கையளிப்பு

■ பாறுக் ஷிஹான்

மருதமுனை அல் மனார் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) பெண்கள் பிரிவு மற்றும் நற்பிட்டிமுனை லாபீர் வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளுக்குமான காணிக் கையளிப்பு புதன்கிழமை (29) கல்முனை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாகத் அலியால், இரு பாடசாலைகளின் காணி பத்திரங்கள் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.



எஸ் சஹுதுல் நஜீமிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலக காணிப்பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் எச்.எல்.எம் மபாஸ், காணி பயன்பாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எம் ஜெளபர் ஆகியோர் கலந்து கொண்டனர்



## தையல் நிலைய அங்குரார்ப்பணம்

■ நூருல் ஹுதா உமர்

வரையறுக்கப்பட்ட கல்முனை அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் கடனுதவியின் கீழ் உருவாக்கப்பட்ட சம்மாந்துறை பிரதேச வீரமுனை தையல் நிலைய அங்குரார்ப்பண வைபவமும், ஐங்கரன் கிராமிய மகளிர் சிக்கன கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கான தையல்இயந்திரம் கையளிப்பும் நேற்று (30) மகளிர் சிக்கன கூட்டுறவு சங்க தலைவி எஸ்.யு. சிசிலியா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.ஐ. எம் பரீட், சமாச கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஆர். இராமகிருஷ்ணன், சங்க கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். ராஜசேகர், வரையறுக்கப்பட்ட கல்முனை அம்பாறை மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் தலைவர் எஸ். லோகநாதன், கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் பிரதம இலிகிதர் எஸ். வனிதா, ஐங்கரன் கிராமிய மகளிர் சிக்கன கூட்டுறவு சங்க செயலாளர் விமலா கிருபராஜா உட்பட உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.



தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின்

## ஊடக நுழைவு மைய அங்குரார்ப்பணம்

■ நூருள் ஹுதா உமர்

தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் ஊடக அணுகல் மையத்தை ஸ்தாபிப்பதற்கான நிகழ்வு வியாழக்கிழமை (30) கலை கலாசார பீடத்தின் மாணவர் செயற்பாட்டு நிலையத்தில் இடம்பெற்றது.

கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். இன்ஸ்பெயார் (InSPIRE) செயற்றிட்டத்தின் முகாமையாளர் திருமதி சந்துல கும்புக்ககே தலைமையிலான குழுவினர், சிரேஷ்ட பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மன்னாரில் கவனயீர்ப்பு போராட்டம்:

# சட்டவிரோத மண் அகழ்வை நிறுத்த கோரிக்கை

### அரச அதிகாரிகள் இலஞ்சம் பெறுவதாகவும் குற்றச்சாட்டு

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

மன்னார் மாவட்டத்தில் தொடர்சியாக இடம் பெற்று வரும் இயற்கைக்கு விரோதமான செயற்பாடுகளை நிறுத்த கோரி, தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் வி.எஸ் சிவகரன் தலைமையில் நேற்று (30) காலை அடையாள கவனயீர்ப்பு போராட்டம் மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக நடைபெற்றது.

மன்னார் மாவட்டத்தில் ஆறுகளை அண்டிய பகுதிகளில் சட்ட விரோதமாக தொடர்சியாக மணல் அகழப்பட்டு, ஏனைய மாவட்டங்களுக்கு கடத்தப்படுவதாகவும் உரிய அனுமதி இன்றி காடுகள் அழிக்கப்பட்டு, கிராம பகுதிகளில் மணல் அகழ்வு இடம்பெறுவதாகவும் இதனை தடுத்து நிறுத்த வேண்டிய அரச அதிகாரிகள் இலஞ்சம் பெறுவதாகவும் பொலிஸார் சட்ட விரோத மணல் கடத்தல்காரர்களுக்கு ஆதரவு வழங்குவதாகவும், இவ்வாறான இயற்கை விரோத செயற்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் எனக் கோரி குறித்த போராட்டம் இடம்பெற்றது.



குறித்த போராட்டத்தில் அருட்தந்தை ஜெபாலன் குரூஸ், பேசாலை முருகன் கோவில் பிரதம குரு தர்மகுமார குருக்கள், நெப்ஸோ அமைப்பின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் பெனடிற் குரூஸ், நானாட்டன் பிரதேச சபை முன்னால் தவிசாளர், மாந்தை மேற்கு பிரதேச சபை மற்றும் நானாட்டன் பிரதேச சபை முன்னால் உறுப்பினர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

'சட்ட வாக்கத்தை பாதுகாக்க வேண்டிய பொலிஸாரே இலஞ்சம் வாங்காதே', 'மன்னாரை பாலைவனமாக்க போகின்றீர்களா?', 'சட்டத்தரணிகளே மண் மாபியாக்களை காப்பாற்றாதே', 'அரசாங்க அதிபரே உங்கள் மௌனம் கலையட்டும்', 'விவசாய நிலங்கள் உவர் ஆகிவிட்டன', 'வாழ்வதற்கு வழியேது', 'பொறுப்பற்ற புவிசரிதவியல் திணைக்களமே விழித்துக்கொள்ள மாட்டீர்களா?' போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு போராட்டகாரர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் இறுதியில் மண் அகழ்வுக்கு எதிராகவும் மன்னார் மாவட்டத்தில் இடம் பெறும் சட்ட விரோத செயற்பாடுகள் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகத் தயாரிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்கள் போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன.



## புதுக்குடியிருப்பில் நடைபாதை வியாபாரிகளால் சந்தை வணிகர்கள் பாதிப்பு

■ செ. கீதாஞ்சன்

புதுக்குடியிருப்பு நகர்ப்பகுதியில் நடைபாதை வியாபாரிகளின் வியாபார நடவடிக்கையால் சந்தை வியாபாரிகள் பாதிக்கப்பட்டு உள்ளதாக புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை அனைத்து வணிபங்களின் உரிமையாளர்கள் முல்லைத்தீவு உள்ளூராட்சி மன்ற ஆணையாளருக்கு மனு கையளித்துள்ளார்கள்.

அந்த மனுவில், புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை மரக்கறி வாணிப உரிமையாளர்கள், புடவை வாணிப உரிமையாளர்கள், பழக்கடை வாணிப உரிமையாளர்கள், மீன் வாணிப உரிமையாளர்கள் ஆகிய நாம், தெரியப்படுத்தும் விடயம் என்னவெனில், பொதுச்சந்தைக்கு நாளாந்தம் மக்கள் வருகை தருவது மிகவும் குறைவடைந்துள்ளது.

இதற்கான காரணம், புதுக்குடியிருப்பு சந்தியில் இருந்து பரந்தன் வீதியிலும் புதுக்குடியிருப்பு சந்தியில் இருந்து முல்லைத்தீவு வீதியிலும் அனைத்து நடைபாதை வியாபாரமும் நடைபெற்று வருகிறது.

கொரோனா நோய் காரணமாக அனுமதிக்கப்பட்ட நடைபாதை வியாபாரம், இன்று வரையும் தடைசெய்யப்படவில்லை. தடை செய்யப்படாமையால், நடைபாதை வியாபாரம் செய்தவர்களெல்லாம் வீதி ஓரங்களில் கடைகள் அமைத்து நிரந்தரமாக வியாபாரம் செய்து வருகிறார்கள்.

எனவே, நடைபாதை வியாபாரம் அனைத்தையும் முழுமையாக தடைசெய்துதவுமாறும் எங்களுக்கு பூரணமான ஒத்துழைப்பையும் ஆதரவையும் தந்துதவுமாறும் வேண்டிநிற்கின்றோம் என்றும் அந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

குறித்த மனு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேச சபை தவிசாளர், பிரதேசசபை உறுப்பினர்கள், புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர், உள்ளூராட்சி மன்ற ஆணையாளர், முல்லைத்தீவு மாவட்டம் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.



## 15 வருடங்களின் பின்னர் ஆரம்பித்த பாலர் பாடசாலை

சாவகச்சேரி, சங்கத்தனை சாரதா சனசமூக நிலையத்தின் இளங்கோ பாடசாலை 15 வருடங்களின் பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பிரதேசத்தை சேர்ந்த புலம்பெயர் உறவுகள், சாரதா சனசமூக நிலையத்தினர் ஆகியோரின் முயற்சியால், இளங்கோ பாலர் பாடசாலை சனசமூக நிலைய கட்டடத்தில் கடந்த வாரம் முதல் செயற்பட ஆரம்பித்துளளது.



இதன் மீள் அங்குரார்ப்பண விழா சனிக்கிழமை (25) ஆசிரியர் நா. மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் என். சர்வேஸ்வரன், ஆசிரியர் என் அருட்சோதி வர்ணன், க. சத்தியசீலன், ஐ.கோ சந்திரசேகரம், ஆசிரியர் க. மதியழகன், சாவகச்சேரி நகராட்சி மன்ற சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ஜெ. செல்வராணி, ம. நடனதேவன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

## சுற்றுக் காவல் நடவடிக்கை

■ நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, முக்கொம்பனில் அதிகரித்துள்ள சமூக வன்முறைகளைக் கட்டுப்படுத்தும்படி, பொதுஅமைப்புகள் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

சட்டவிரோத மது உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில், முக்கொம்பனில் பொலிஸ் பிரிவு ஒன்றை உருவாக்குமாறு முக்கொம்பன் மாதர் அமைப்புகளைச் சேர்ந்த பெண்களால், இரணைமடுவில் உள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதி பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில், கடந்த மாதம் மனு கையளிக்கப்பட்ட நிலையில், பூநகரி பொலிஸார், முக்கொம்பனில் மக்களைச் சந்தித்து நிலைவரங்களை கேட்டு, சட்டவிரோத மது உற்பத்திக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்து இருந்தனர்.

முக்கொம்பன் மாதர் அமைப்புகளின் பிரதிநிதிகளை, இரணைமடுவுக்கு உரிய பொலிஸ் உயரதிகாரிகள், பூநகரி பொலிஸ் நிலையத்தில் சந்தித்து, அக்கராயன் பொலிஸார் முக்கொம்பன் மகா வித்தியாலயம் வரை, இரவு வேளைகளில் சுற்றுக் காவல் பணியில் ஈடுபடுவார் எனத் தெரிவித்த நிலையில், அக்கராயன் பொலிஸார் முக்கொம்பன் வரை இரவு வேளைகளில் சென்று திரும்புகின்றனர்.

இந்நிலையில், முக்கொம்பனில் அதிகரித்துள்ள சமூக வன்முறையின் தொடர்ச்சியாக புதன்கிழமை (29) இரவு மோட்டார் சைக்கிள் தீ மூட்டப்பட்டு உள்ளதுடன் அடிக்கடி மோதல்களும் இடம்பெற்று வருகின்றன. இதன் காரணமாக விரைவாக பொலிஸ் பிரிவை முக்கொம்பனில் அமைக்குமாறு மாதர் சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

# அரிசி கொடு

**எஸ். கே. குமார்**

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் வறிய குடும்பங்களுக்கு இலவசமாக அரிசி வழங்கும் வேலைத்திட்டத்தில், கடந்த காலங்களைப் போல பெருந் தோட்ட தொழிலாளர்கள் புறக் கணிக்கப்படாமல், பெருந்தோட்ட தொழிலாளர்களும் உள்வாங்கப்பட வேண்டும் என ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் நுவரெலியா தமிழ் பிரதி நிதிக்குழு தலைவரும் நுவரெலியா தொகுதி அமைப்பாளருமான கலாநிதி சதானந்தன் திருமுருகன் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



இலங்கையில் ஆக குறைந்த வருமானம் பெரும் சமூகங்களில் முதலாவது இடத்தில் இருப்பது பெருந்தோட்ட தொழிலாளர் சமூகம்தான். உழைப்பிற்கேற்ற ஊதியம் கிடைக்காமல், வறுமை கோட்டின் கீழ் தோட்டத் தொழிலாளர்கள் வாழ்வாதாரத்தை கொண்டு செல்கின்றனர்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைத் தெரிவு செய்யும் பொழுது, பெருந்தோட்ட தொழிலாளர்களையும் தெரிவு செய்து அவர்களுக்கும் இலவசமாக வழங்கப்படும் பத்து கிலோ கிராம் அரிசி வழங்கப்பட வேண்டும்.

இந்த நாட்டில் குடியேறி 200 வருடங்கள் கடந்தும் இன்னும் இந்த நாட்டில் வாழும் சமூகங்கள் அரசாங்கத்திடம் பெறும் உரிமைகளையும் சலுகைகளையும் இந்திய வம்சாவளி பெருந்தோட்ட சமூகம் பெற முடியாமல் தவிக்கின்றார்கள்.

சமுர்த்தி உதவி திட்டம் முறையாக பெருந்தோட்ட மக்களுக்கு கிடைப்பதில்லை. அதேபோல கல்வி, சுகாதாரம், வைத்தியவசதிகள், அரசாங்க தொழில் வாய்ப்பு என்பனவும் முறையாக கிடைப்பதில்லை. இது இந்த நாட்டில் வாழும் அனைத்து அரசியல்வாதிகள் அனைவருக்கும் தெரிந்த விடயமாகும்.

எனவே, கடந்த 200 வருடங்களாக இந்த நாட்டின் அரசியல்வாதிகளையும் அரசாங்கத்தையும் நம்பி வாழும் இந்தியவம்சாவளி மக்களையும் இந்த நாட்டின் பிரஜைகளாக மதித்து, 29 இலட்சம் மக்களுக்கு இலவசமாக வழங்கும் பத்து கிலோ கிராம் அரிசியை பெருந்தோட்ட மக்களுக்கும் முறையாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரியுள்ளார்.



## இந்திய முட்டையை எங்களுக்கும் தாருங்கள்

**ரஞ்சித் ராஜபக்ஷ**

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட முட்டைகளை மலையகத்தில் உள்ள பேக்கரிகளுக்கு விற்பனை செய்யுமாறு பேக்கரி உரிமையாளர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நுவரெலியாவில் உள்ள பேக்கரிகளுக்கு, சதொச ஊடாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் பேக்கரி உரிமையாளர்கள் கோரியுள்ளனர்.

“நாங்கள் சிறியளவிலேயே பேக்கரி உற்பத்திகளைச் செய்து வருகின்றோம். அதற்காக நாளொன்றுக்கு 300-500 முட்டைகள் மட்டுமே தேவைப்படுகின்றன. சந்தையில் தற்போது 55 ரூபாய்க்கும் 60 ரூபாய்க்கும் இடைப்பட்ட விலையில் முட்டைகள் விற்பனை செய்யப்படுகின்றன. கூடிய விலைகளில் முட்டையை கொள்வனவு செய்து, பேக்கரி கைத்தொழிலை முன்னெடுக்க முடியாது” என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## கல் அகழ்ந்த எழுவர் கைது

மகாவலி கங்கைக்கு நீரை கொண்டு செல்லும் ஆறுகளில் ஒன்றான ஹட்டன்ஓயா ஆற்று வனாந்தரத்தில் சட்டவிரோதமான முறையில் மாணிக்கக்கல் அகழ்ந்த குற்றச்சாட்டின் கீழ் ஏழுபேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹட்டன், ஸ்டெதன் தோட்டத்தைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். 25 வயதுக்கும் 40 வயதுக்கும் இடைப்பட்ட இவர்கள், பயன்படுத்திய உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவித்த ஹட்டன் பொலிஸார், கைது



செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களை பொருட்களுடன் ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றனர்.

## மதுபானங்களுடன் 25 பேர் கைது

**ரஞ்சித் ராஜபக்ஷ**

அனுமதிப்பத்திரம் இன்றி பியர், கள் ஆகியவற்றை விற்பனை செய்த குற்றச்சாட்டின் கீழ், 25 பேரை ஹட்டன் கலால்வரி காரியாலய அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

அவர்கள், ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் நேற்று (30) ஆஜர்படுத்தப்பட்டனர். சந்தேகநபர்கள் தங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டமையால், ஒரு இலட்சத்துக்கு 50 ஆயிரத்து 500 ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு, ஹட்டன் மாவட்ட நீதிமன்ற நீதவான் பாருக் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டபோதே நீதவான் மேற்கண்டவாறு உத்தரவிட்டுள்ளார்.

## மஸ்கெலியா இந்து மாமன்றம் எதிர்ப்பு

**செ.தி.பெருமாள்**

வவுனியா, வெடுக்குநாறி லிங்கேஸ்வரர் ஆலயத்தை விஷமிகள் தகர்த்து, விக்கிரங்களை எறிந்துள்ளதை வன்மையாகக் கண்டித்துள்ள மஸ்கெலியா இந்து மாமன்றம் தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

இது குறித்து மஸ்கெலியா இந்து மாமன்ற செயலாளர் கூறுகையில், மதவாதம் மீண்டும் வேண்டாம்; உலகின் முதல் முதற் கடவுள் சிவனே! ஆகையால் எமது இலங்கை திருநாட்டில் வாழும் சகல மக்களும் இன, மத, மொழி பேதமின்றி ஒரு தாய் மக்களாக வாழ வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

நாம் வணங்கும் சகல ஆலயங்களையும் நாமே பாதுகாக்க வேண்டும்.

இனவாதிகளாக செயற்பட கூடாது. வவுனியா, வெடுக்குநாறி லிங்கேஸ்வரர் ஆலயம் மீண்டும் அதே இடத்தில் இருந்தவாறே அமைக்க சகல அரசியல்வாதிகள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சு, கலாசார திணைக்களம் மற்றும் ஜனாதிபதி முன்வர வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.





### காணி சுவீகரிப்புக்கு எதிராக இந்தகலவில் ஆர்ப்பாட்டம்

நமுனுகுல பெருந்தோட்ட கம்பனிக்கு உரித்துடைய இந்தகல தோட்டத்தில் 73 ஏக்கர் காணியை தனிநபர் ஒருவர் சுவீகரிக்கின்றமையை கண்டித்து, இத்தோட்ட தொழிலாளர்கள் நேற்று (30) கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நடராஜா மலர்வேந்தன்



## சின்ன ரயில் ஓடுகிறது

**ரஞ்சித் ராஜபக்ஷ**

நுவரெலியா விக்டோரிய பூங்காவில் சிறுவர் விளையாட்டு திடலில் உள்ள சின்ன ரயில், நேற்று (30) முதல் ஓட ஆரம்பித்துள்ளது. அதனை, நுவரெலியா மாநகர சபையின் ஆணையாளர் சுஜீவ போதிமான்ன ஆரம்பித்து வைத்தார்.

ரயிலை பராமரிப்பதில் ஏற்பட்டிருந்த செலவு காரணமாக, அந்த ரயில் நீண்டநாள்களாக ஓடவில்லை. எனினும் ஆணையாளரின் தலையீட்டால் திருத்தப்பட்ட அந்த ரயில், நுவரெலியா வசந்த காலத்தை முன்னிட்டு ஓட ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நுவரெலியாவுக்கு வருகைதரும் உள்ளூர், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பிள்ளைகள், இந்தச் சிறுவர் பூங்காவில் சுமார் ஒரு கிலோ மீற்றர் பயணம் செய்யமுடியும். அதற்காக ஒருவரிடமிருந்து 100 ரூபாய் மாத்திரமே அறவிடப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டுக்கான நுவரெலியா வசந்த காலம், ஏப்ரல் முதலாம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையிலும் இடம்பெறும்.

## ஆசிரியை ஏ.ஜே.சித்தி நஸீலா ஓய்வு பெற்றார்

**நடராஜா மலர்வேந்தன்**

பசறை தமிழ் மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) தனது மூன்று தசாப்த கல்விச் சேவையை பூர்த்தி செய்து ஏ.ஜே. சித்தி நஸீலா ஓய்வு பெறுகின்றார்.

1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி ஆசிரியர் நியமனம் பெற்ற இவர், பசறை தமிழ் மகா வித்தியாலயத்தில் தனது கல்வி பணியை ஆரம்பித்தார்.

அன்று முதல் இன்றுவரை சுமார் 33 வருடங்கள் தொடர்ச்சியாக இப்பாடசாலையில் சேவையாற்றி, பாடசாலை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உன்னத




சேவையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்.

தேசிய கல்வி நிறுவகத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஆசிரியர்களின் வாய்மை விருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் ஆசிரியர் பயிற்சியை தொலைக்கல்வி மூலம் 1995 - 1998 காலப்பகுதியில் நிறைவு செய்து ஆரம்ப கல்விக்கு பயிற்றப்பட்ட ஆசிரியராக தன்னை இலங்கை ஆசிரியர் சேவையில் நிலைப்படுத்திக்கொண்டார்.

உன்னத கல்விச் சேவையிலிருந்து கௌரவமாக 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30 ஆம் திகதி ஓய்வுபெறுகின்ற ஆசிரியை அப்துல் ஜப்பார் சித்தி நஸீலாவின் பணி ஓய்வு காலம் இனிதே அமைந்திட வேண்டுமென பசறை பிரதேச கல்வி சமூகத்தினர் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளனர்.






## வசந்த கால களியாட்டம்

நுவரெலியாவில் வருடம் தோறும் நடைபெறும் ஏப்ரல் வசந்த கால களியாட்ட நிகழ்வுகள், நாளை முதலாம் திகதி சனிக்கிழமை காலை ஆரம்பமாகும். இதைத் தொடர்ந்து எதிர்வரும் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை தினந்தோறும் கலை, கலாசார, விளையாட்டு போட்டிகளும் மலர் கண்காட்சி போட்டிகளும் நடைபெறும்.


நுவரெலியா மாநகர சபை விசேட ஆணையாளர் சுஜீவா போதிமான தலைமையில் நுவரெலியா கிறகறி வாவிக்கு அருகாமையில் பாடசாலை மாணவ, மாணவிகளின் பேண்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதையுடன் வசந்த கால நிகழ்வுகள் கோலாகலமாக ஆரம்பித்து வைக்கப்படும்.


(எஸ்.கே குமார்)











# பாதிக்கப்பட்ட அனைவருக்கும் 'அரிசி நிவாரணம்' வழங்கவேண்டும்

அரசாங்கத்தின் ஜனரஞ்சகமான அறிவிப்புகளால், பலரும் குதூகலித்து ஆனந்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருக்கின்றனர். இன்னும் சில தரப்பினர், ஏக்கப்பெருமூச்சு விட்டுக்கொண்டு, எங்களுக்கும் கிடைக்காதா, என வீட்டு படிக்கட்டுகளில் அமர்ந்தவாறு 'வழி மேல் விளி வைத்து' பார்த்துக்கொண்டிருக்கின்றனர்.

விலை குறைப்புகளுக்குப் பின்னர், சேவைகளுக்கான கட்டண குறைப்பு என யாவும், நேற்று (30) நள்ளிரவு முதல் அமலாகின. இதனால் பலருக்கும் இரட்டிப்பு மகிழ்ச்சி இருந்தாலும், இவையெல்லாம் சாதாரண மக்களைச் சென்றடையுமா எனக் கேள்வி எழுப்பினால், விடை பூச்சியம்தான்!

பெருநகரங்களில் சாதாரண தொழில்களில் ஈடுபடுபவர்களில் பலர் வெளிமாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர். அவ்வாறானவர்கள், வாடகைக்கு அறைகளை எடுத்து கடமைகளைக்குச் செல்வர்; மூவேளையும், உணவகங்களையே நம்பியிருப்பர். ஹெக்டர் விவசாய பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட அறிக்கையில், சாப்பாட்டு வேளைகளை குறைத்துக்கொள்ளும் தரப்பினர்களில் இவர்களும் அடங்குவர்.

சைவ, அசைவ பிரியர்கள், காலை அல்லது இரவில் ஒருவேளை உணவாக பரொட்டா எடுத்துக்கொள்வர்கள். சைவ உணவகங்களில் கறிகளுடன் பரொட்டாவுக்கு ஒரு விலையும், அசைவ உணவகங்களில் பரொட்டாவுக்கு வேறாக கறிகளை காசுக்கொடுத்து வாங்கவேண்டும்.

என்னதான் கோதுமை மாவின் விலை குறைந்திருந்தாலும் வேறுபல காரணங்களை கூறி, பரோட்டக்களின் விலைகளை எவரும் குறைப்பதற்கு முன்வரவில்லை. உதாரணமாக ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் விலை 395 ரூபாயாக இருந்தபோதும் பரொட்டா ஒன்றின் விலை 50 ரூபாய்; கோதுமையின் தற்போதைய விலை 195 ரூபாய்; தற்போதும் பரொட்டா ஒன்றின் விலை 50 ரூபாயாகவே இருக்கிறது.

தட்டிக்கேட்டால், மின்சாரக் கட்டணம் அதிகம், காஸ் விலை குறைக்கவில்லை என்று வியாக்கியானம் சொல்வார்கள். மின்சாரத்துக்கும் பரோட்டாவுக்கும் இருக்கும் தொடர்பு விளக்கமில்லாதுள்ளது. விலைகளை குறைத்தால் மட்டுமே போதாது; அவை அமல்படுத்தப்படுகின்றனவா என்பதையும் அரசாங்கம் அவதானிக்கவேண்டும்.

அமல்படுத்தாத வர்த்தகர்களுக்கு எதிரான அதிரடி நடவடிக்கைகள் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும். அதனூடாகவே எஞ்சியிருக்கும் சிறு முதலாளிகள் சிந்திப்பர். இல்லையேல் என்னதான் ஜனரஞ்சகமான தீர்மானங்களை எடுத்தாலும், அவை மக்களை சென்றடையவில்லை எனில், அதனால் மக்களுக்கு எந்தவிதமான பிரயோசனமும் கிடையாது.

2022/2023 ஆண்டுக்கான பெரும்போக நெல்லை அரசாங்கம் விலைக்கு பெற்றுக்கொள்வது மற்றும் நெல்லை பகிர்ந்தளிக்கும் வேலைதிட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. வறுமை கோட்டின் கீழ் வாழும் மக்கள் தொடர்பிலான விவரங்களுக்கு, இம் மாதம் 31 திகதி வரை காலக்கெடு விதிக்கப்பட்டிருந்தது.

எனினும், பல மாவட்டங்களில் இருந்து, முழுமையான தகவல்கள் இன்னும் சென்றடையவில்லை. இந்த வேலைத்திட்டத்தின் கீழ் மலையக தோட்ட பகுதியில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் நிவாரணம் வழங்கப்படவேண்டுமென கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் அரசாங்கம் கூர்ந்து கவனிக்கவேண்டும்.

இந்நிலையில், அரசாங்கம் வழங்கிய நிவாரணத்தை சுமார் 3,000க்கும் மேற்பட்ட பிரிவினருக்கு இல்லாமல் செய்த அபிவிருத்தி அதிகாரிகள் பணியில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர். மெல்சிறிபுரவில் இடம்பெற்றிக்கும் இந்தச் சம்பவம் சகலருக்கும் ஒரு பாடமாக இருக்கவேண்டும்.


தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

காட்சிகளும் பேச்சுகளும் நிரந்தரமாக இருப்பதில்லை. இவை எல்லாமே நேரத்துக்கு உகந்தவாறு மாறிவிடுகின்றன. எல்லாமே மாயை!

உலகத்தில் எதுதான் நிரந்தரம்? இன்றைய உலகம் காலப்பெயர்ச்சியால் புதியதாக உருக்கொள்கின்றது. மானிட நடத்தைகள் கூட, திரிபடைந்த வண்ணமாக உள்ளன. இன்றைய நண்பர், நாளைய எதிரியாகலாம்; பொல்லாத எதிரியும் நண்பர்களாகலாம்.

சமூகங்களின் மாற்றங்கள், நாகரிகம் என்ற பெயரில் அடிக்கடி மாறியபடியே உள்ளன. நட்பு நாடுகள் பகை நாடுகளாக உருமாறுகின்றன. சுயநலத்துக்காக எதிரிகள், நட்பாக நடிக்கின்றனர்.

உலகம் என்னதான் மாறினாலும் முன்னேற்றங்கள் எல்லாமும் உடைவதில்லை. இந்நிலையை இறைவன் விரும்புவதில்லை. கல்வி, கண்டுபிடிப்புகள், ஆய்வுகள், இலக்கிய வளர்ச்சிகள் என்பன எல்லா நாடுகளிலும் வளம்பெற்றுக்கொண்டேதான் இருக்கின்றன.

அழிவுகளைக் கருதாமல், எதிர்நீச்சலடிப்பதே மானிட வளர்ச்சியாகும். உலகம் உயர்ந்தேயாக வேண்டும்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

### வலதுசாரி தீவிரவாதத்தின் நிழலில் – 21:

# இருபதாம் நூற்றாண்டின் நெருக்கடி



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

கடந்தவாரம், இலத்தின் அமெரிக்காவில் அதிவலது தோற்றம் பெற்ற வரலாற்றைப் பார்த்தோம். கொலம்பஸ்ஸின் வருகையுடன் இலத்தின் அமெரிக்காவின் முகம் மாறத் தொடங்கியது. பிரேஸிலும் இன்னும் சில சிறிய தீவுகளும் தவிர்ந்த ஏனைய பகுதிகள் ஸ்பெயினின் கொலனிகளாகின. அங்கு குடியேறிய ஸ்பானியர்கள் புதிய அதிகாரம் மிக்க இனக்குழுவாக உருவெடுத்தார்கள். அவர்கள் தங்களை 16/17ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் செல்வாக்குச் செலுத்திய ஐபீரிய ஏகாதிபத்தியத்தின் வழித்தோன்றல்களாகக் கருதினார்கள். கிறிஸ்தவத்தையும், நிறவெறியையும் தமது ஆயுதமாக்கினர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஐபீரிய ஏகாதிபத்திய மகிமையின் தொன்மங்கள் மிகப்பாரிய நெருக்கடியை எதிர்நோக்கின. 1898இல் ஸ்பெயின் அதன் எஞ்சியிருந்த கரீபியன் பகுதிகளையும் பிலிப்பீனியக் கொலனிகளையும் இழந்தது. இவ்விழப்பு மிகவும் முக்கியமானது. ஏனெனில் இதுவே ஒரு காலத்தில் பரந்து விரிந்திருந்த உலகப் பேரரசின் கடைசித் துண்டுகளாகும்.

ஐபீரிய ஏகாதிபத்தியத்தின் வீழ்ச்சி, அமெரிக்காவின் ஏகாதிபத்திய எழுச்சியுடன் இடைவெட்டியது. இது தீபகற்ப ஸ்பானியர்களிடையே ஓர் ஆழமான நெருக்கடியை உருவாக்கியது. அவர்கள் தங்கள் பண்பாட்டுத் தேசியவாதத்தை அமெரிக்காவால் ஏற்பட்ட தோல்வியின் அவமானத்துடன் சமரசம் செய்யப் போராடினர்.

தெளிவாகச் சொல்வதானால், இந்த உடைவிலிருந்து இரண்டு அறிவுசார் நிலைகள் வெளிப்பட்டன. ஒன்று, இலத்தீன் அமெரிக்காவின் பின்கொலனித்துவ தாராளவாதச் சிந்தனைகளுக்கு வழிவகுத்தது. பின்கொலனித்துவ தாராளவாதிகள், ஸ்பெயின் தப்பிப்பிழைக்க வேண்டுமானால், முடியாட்சி, மதகுருமார்கள் மற்றும் பிரபுத்துவம் ஆகியவற்றைக் கொண்டிருந்த நிலப்பிரபுத்துவத்தைத் தூக்கி எறிந்து நவீனமயமாக வேண்டும் என்று வாதிட்டனர்.

மற்றொன்று, இலத்தீன் அமெரிக்காவின் பின்கொலனித்துவ பழைமைவாதச் சிந்தனைகளாக வெளிப்பட்டது. இப்பழைமைவாதிகள், ஸ்பெயின் அதன் முக்கிய இலட்சியங்களிலிருந்து விலகியதால் வீழ்ச்சியடைந்து வருவதாகவும், நம்பிக்கை, அதிகாரப் படிநிலை, பேரரசு, பாரம்பரியம் ஆகியவற்றில் கூடிய கவனம் செலுத்தி, அவற்றை வலுப்படுத்த வேண்டும் என்றும் வாதிட்டனர்.

இவ்விரு கருத்துகளுக்கும் இடையில் ஓர் ஒருமைப்பாடு ஏற்படவில்லை. மாறாக, இருதரப்பினரும் தமது கருத்துகளை மேலும் உறுதியாக்கியதோடு மற்றையதைக் பகைமையோடு நோக்கினர். இதனால், இரண்டு கருத்துகளுக்கும் இடையிலான இடைவெளி சில தசாப்தங்களுக்குப் பிறகு ஸ்பானிய உள்நாட்டுப் போராகப் பேரழிவு தரும் வடிவத்தை எடுத்தது.

1936இல் ஸ்பெயினை ஆளும் ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட, மதச்சார்பற்ற ஜனநாயக முன்னணியின் கூட்டணியானது, பொருளாதார மற்றும் அரசியல் வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்தும் தன்னலக் குழுக்களையும் மத கட்டமைப்புகளை அகற்றுவதற்கான அதன் முயற்சிகளுக்காக வலதுசாரிகளின் கோபத்தையும் பெற்றது.

கத்தோலிக்க திருச்சபையை முடக்குவதற்கும் நிலப்பிரபுத்துவத்தை உடைப்பதற்கும், விவசாய சீர்திருத்தங்களை நிறுவுவதற்கும் மேற்கொண்ட நகர்வுகள் துருவமுனைப்பை ஏற்படுத்தியது. முற்போக்கான தன்மையை பெறமுயன்ற அரசுக்கு எதிராக, பிற்போக்குச் சக்திகள் ஓரணியில் திரண்டன. இதனால் மக்கள் ஆதரவு பெற்றிருந்த அரசு நெருக்கடிக்காளானது.

அதேவேளை, அரசால் மக்கள் விரோத வன்முறையைத் தடுக்க இயலாமல் போனது. முற்போக்கு நிலைப்பாடுகள் பழைமைவாதப் பிரிவுகளின் ஒன்றிணைவைச் சாத்தியமாக்கியது. இவை அனைத்தும் சேர்ந்து அரசாங்கத்தைத் தூக்கியெறியச் செய்தது.

இலத்தீன் அமெரிக்கர்கள் ஸ்பெயினின் மூன்று வருட இரத்தக்களரியை உன்னிப்பாகக் கவனித்தனர். ஏனெனில், அங்கு போராட்டத்துக்கு உரியதான பிரச்சினைகள், தங்கள் சொந்த சமூகங்களைப் பிளவுபடுத்தும் பிரச்சினைகளுக்கு இணையாக இருந்தன. குறிப்பாக, தீவிர சமத்துவமின்மை, தேவாலயத்துக்கும் அரசுக்குமான உறவு, அதிகரித்து வரும் தொழிலாளர் போர்க்குணம், பாலினஞ்சார் சிந்தனைகளில் மாற்றம் என்பன ஸ்பெயினில் இருப்பது போலவே இலத்தீன் அமெரிக்காவெங்கும் இருந்தது. ஸ்பானிய வலது இறுதியாக 1939இல் வெற்றி பெற்றது.

கிளர்ச்சிக்கான தேசியவாதப் படைகளின் தலைவரும், மேற்கத்திய கிறிஸ்தவத்தின் மீட்பராகத் திகழ்ந்தவரும் நாஜி ஆதரவு பெற்றவருமான ஜெனரல் பிரான்சிஸ்கோ ஃபிராங்கோ, நவீன ஐரோப்பாவின் மிக நீண்ட கால சர்வாதிகாரத்தை நிறுவினார். 'வெள்ளைப் பயங்கரம்' என அறியப்பட்ட இவரது சர்வாதிகாரம் இரண்டு இலட்சம் மக்களைக் காவுகொண்டது. 1975இல் இவர் இறக்கும்வரையும் இது தொடர்ந்தது. இவரது ஆட்சி அமெரிக்காவின் ஆசீர்வாதம் பெற்றதாக இருந்தது.

ஸ்பெயின் உள்நாட்டுப் போரின் போது தேசியவாதிகளை எதிர்த்த பாஸ்க் நகரமாக குவேர்னிகா மீது 1937இல் மோசமான குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டு, அந்நகர் தரைமட்டமாக்கப்பட்டது. இதைக் குறிக்கும் வகையிலேயே 'பப்லோ பிக்காசோ' புகழ்பெற்ற குவேர்னிகா ஓவியத்தை வரைந்தார். இன்றும் போருக்கெதிரான முக்கிய குறியீடாக இவ்வோவியம் அறியப்படுகிறது. இன்றும் இவ்வோவியத்தின் பிரதி ஒன்று ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் வாயிலில் வைக்கப்பட்டுள்ளது.

ஸ்பெயினைப் போல உள்நாட்டுப் போர் ஒன்று ஏற்படாமல் இருக்க போர்த்துக்கல் தன்னாலான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தது. ஆனால், அன்டோனியோ டி ஒலிவேரா சலாசர் தலைமையில் அமைந்த கத்தோலிக்க, கம்யூனிச எதிர்ப்பு சர்வாதிகார ஆட்சி, பிராங்கோவை ஆதரித்ததோடு பிராங்கோவின் ஆட்சியின் பல நடைமுறைகளைப் பின்பற்றியது.

சலாசரால் தொடக்கப்பட்ட சர்வாதிகார ஆட்சி 1974 வரை போத்துக்கலில் நிலைத்தது. சர்வாதிகாரி சலாசர் உலகின் மிகப்பழைய பல்கலைக்கழகங்களில் ஒன்றான கொயம்பரா பல்கலைக்கழகத்தின் அரசியல் பொருளாதார பேராசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலத்தீன் அமெரிக்க பழைமைவாதத்தின் பரிணாம வளர்ச்சியில் ஸ்பானிய உள்நாட்டுப் போர் முக்கியமானது. ஏனெனில், இது இருபதாம் நூற்றாண்டின் மிகவும் ஆபத்தான மற்றும் நீடித்த அரசியல் ஆயுதங்களில் ஒன்றாக இருந்தது. அதிகாரபூர்வ கிறிஸ்தவம் மற்றும் கம்யூனிசத்துக்கு எதிரான பின்னல் ஆகிய இரண்டும் முக்கியமானதாய் கருதப்பட்டன. இவ்விரண்டினதும் இணைப்பு முக்கியமான அரசியல் இயங்கியலாக அடையாளம் காணப்பட்டது. இது கெடுபிடிப்போருக்கு வெகுகாலம் முன்பே, அமெரிக்காவின் சி.ஐ.ஏ அமைப்பு உருவாக்கப்பட்டிருக்காத காலப்பகுதியில் நடந்தது என்பதையும் நாம் நினைவிலிருத்த வேண்டும்.

ஃபிராங்கோவின் படைகள் சிலுவைப்போர் மற்றும் மீள்வெற்றிகாணல் போன்ற வரலாற்று ஒப்புமைகளை தாராளமாக பயன்படுத்தின. இருப்பினும், அவர்களின் புதுப்பிக்கப்பட்ட கதையாடலில், தேசத்தின் உயிர்வாழ்வுக்காகத் தூய்மைப்படுத்த வேண்டிய வெளிநாட்டு 'படையெடுப்பாளர்கள்' முஸ்லிம்கள் அல்ல; களையெடுக்கப்பட வேண்டியவர்கள் கம்யூனிஸ்டுகள் என்று அறிவித்தார்கள். தேசியவாதிகள் கம்யூனிசத்தை இனமயமாக்கினர். ஹிஸ்பானிக்கின் சீரழிவுக்கு அச்சுறுத்தலாக பாலியல் சுதந்திரத்துடன் 'சிவப்பு மரபணு' என்று அழைக்கப்படுவதைக் குற்றம் சாட்டினர்.

வத்திக்கான், அதன் பங்குக்கு, இந்த விடயத்தில் தனது முழு அதிகாரத்தையும் பயன்படுத்தியது. 1937 மார்ச்சில் வெளியிடப்பட்ட போப்பாண்டவரின் கலைக்களஞ்சியமான 'டிவினி ரிடெம்ப்டோரிஸ்', போர் மூளும் போது, கம்யூனிசத்தை சாத்தானிய தர்க்கத்திற்கு கீழ்ப்படிந்த 'ஆன்மீக ஒழுங்கின் தீமை' என்று விவரித்தது. சமூகத்தையும் அதன் அஸ்திவாரங்களையும் அசைக்கும் கடவுள்-எதிர்ப்பு பிரசாரத்தின் அழிவுகளை தங்கள் எல்லைக்குள் தடுக்க அனைத்து விடாமுயற்சியும் நாடுகளால் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அது பரிந்துரைத்தது.

திருத்தந்தை 11ஆவது பயஸின் இந்தக் கருத்தின் எதிரொலியாக, ஸ்பானிய ஆயர்களின் குழு ஜூலை 1937 இல் ஒரு கடிதத்தை எழுதியது. இது இலத்தீன் அமெரிக்க மதகுருமார்களிடையே பரவலாக விநியோகிக்கப்பட்டது. இது ஸ்பெயினில் ஆட்சியில் உள்ள அரசாங்கத்தை அகற்றுவதற்கான கிளர்ச்சியாளர்களின் செயல்களை வரவேற்று அவர்கட்கு தமது ஆதரவை நல்கியது. தேசத்தின் வாழ்க்கையைக் காலங்காலமாக உருவாக்கி வந்த மதக் கொள்கைகளையும் கிறிஸ்தவ நீதியையும் பாதுகாக்க, உள்நாட்டுப் போரை ஒரு நியாயமான போராக அறிவித்தது. அக்காலகட்டம் முதல் எதிரி 'கம்யூனிசம்' என்றால் அதற்கெதிரான கிளர்ச்சி வன்முறை நியாயமானது மட்டுமல்ல; அது புனிதமானது என்று பொருள்கொள்ளப்பட்டது. இதை இலத்தீன் அமெரிக்க வலதுசாரிகள் கவனித்தனர்.

அர்ஜெண்டினா பாதிரியார் ஜூலியஸ் மெய்ன்வில்லேயை உற்சாகப்படுத்தியபடி, 'ஸ்பானிஷ் போருடன் துரோக உலகத்தின் மீதான கிறிஸ்தவ வெற்றி தொடங்குகிறது' என்ற கருத்தைக் கட்டமைத்தனர். அனைத்து பகுதிகளின் பழைமைவாதிகளும் தங்கள் கருத்துகளில் மிகவும் கண்டிப்பானவர்களாக இல்லாவிட்டாலும் குரல்கொடுத்தோர், விடாமுயற்சியுடன் தங்கள் தேசிய அடையாளங்களை நம்பிக்கை, ஒழுக்கம், இனம், மொழி மற்றும் சித்தாந்தம் ஆகியவற்றின் பழைமைவாத ஸ்பானியக் கருத்துகளுடன் இணைக்க முயன்றனர். முக்கிய அரசியல் உரையாடலின் எல்லைகளை வலதுநோக்கி மாற்றினர்.

இது அதிவலதிற்கான ஆதரவுத்தளத்தை உருவாக்குவதற்குப் பயன்பட்டது. இலத்தீன் அமெரிக்காவில் 'கம்யூனிச எதிரி'யைக் கருவறுப்பதற்கு அதிவலது முக்கிய கருவியானது.

அதிதீவிர வெறுப்புத் தேசியவாதம், கிறிஸ்தவ அடிப்படைவாதம், இவையிரண்டையும் உந்தித் தள்ளும் சர்வாதிகாரம் என்பன நல்ல கலவையாகின. இதனால் இலத்தின் அமெரிக்கா எங்கும் அதிவலது சர்வாதிகாரங்கள் அமெரிக்க ஆதரவுடன் அதிகாரத்துக்கு வந்தன.

## கடிதங்கள்

### பிரதேச மக்களுக்கு

## புல்லின் பூவால் பாரிய அசௌகரியம்



காரைதீவு பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட மாளிகைக்காடு தோணா நீரேரியில் வளர்ந்துள்ள ஒரு வகைப் புல்லின் பூவிலிருந்து வெளியாகும் சிறு துகள்கள், இப்பிரதேசத்திலுள்ள பொது மக்களின் சுகாதாரத்துக்கு பெரும் சவாலாக அமைந்துள்ளன.

கடந்த பல வருட காலமாக, குறிப்பிட்ட நீரேரியில் வளர்ந்துள்ள இப்புல் பற்றைக் காடாக காணப்படுவதால், தோணாவினூடாக செல்லும் வெள்ள நீர், பாலத்தினூடாக வடிந்து செல்ல முடியாமல் தேங்கி நிற்கின்றது. இதனால் அருகிலுள்ள பிரதேசம், மழை காலங்களில் வெள்ளக் காடாகும் நிலைக்கு உள்ளாகின்றது.

இந்தப் புற்காட்டுக்குள் விஷ ஜந்துகள், நோய்களைப் பரப்பக்கூடிய நுளம்புகள் அதிகமாகப் பெருகிக் காணப்படுகின்றன. மாளிகைக்காடு பாலத்துக்கு அருகாமையில் அல் ஹுசைன் வித்தியாலயம் அமைந்திருப்பதால் பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் நாளாந்தம் பலவிதமான சொல்லொணாத் துயரங்களை அனுபவித்து வருகின்றனர்.

கடுமையான காற்று வீசும் போது, புல்லின் பூவிலிருந்து வெளியாகும் ஒருவிதமான துகள்கள், காற்றில் பரவி உடம்பில் படும்போது உடம்பெல்லாம் அரிப்புத்தன்மையை ஏற்படுத்துகின்றன.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனம் செலுத்துமாறு பிரதேசவாசிகள் கேட்டுள்ளனர்.

அஸ்ஹர் இப்ராஹிம்

‘மனிதநேய ஒன்றிணைவு’ ஊடாக பாதிக்கப்பட்ட

# குடும்பங்களுக்கு நிவாரணம்



நாட்டில் நிலவும் சவால்மிகு பொருளாதாரச் சூழலால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள சமூகத்திற்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்பட்ட ‘மனிதநேய ஒன்றிணைவு’ எனும் மனிதாபிமான நடவடிக்கை மூலம் இதுவரை நாட்டின் அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய 120,000 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்க முடிந்துள்ளது.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, MAS Holdings, Hemas Holdings PLC, சர்வோதய சிரதான சங்கம் மற்றும் PwC ஸ்ரீ லங்கா ஆகியன இணைந்து ‘மனிதநேய ஒன்றிணைவு’ மனிதாபிமான நடவடிக்கையை ஆரம்பித்ததுடன் பின்னர் படிப்படியாக CBL Group, Citi Bank, Sunshine Holdings PLC, Huawei Technologies Lanka Company, Unilever Sri Lanka, London Stock Exchange Group, Roar Global ஆகிய நிறுவனங்களும் இதில் இணைந்து கொண்டன.

பயனுள்ள பொருளாதார மீட்புத் திட்டத்தின் மூலம் நாட்டில் நிலையான பலன் பரிமாற்ற முறை நிறுவப்படும் வரை ‘மனிதநேய ஒன்றிணைவு’ திட்டம் அதன் நிவாரணப் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கும். நாடு முழுவதும் கடுமையாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உடனடி நிவாரணம் வழங்குவதற்கான கூட்டு முயற்சியில் பங்களிக்குமாறு ‘மனிதநேய ஒன்றிணைவு’ ஏனைய அனைத்து மக்களையும் நிறுவனங்களையும் அழைக்கின்றது.

‘நாற்றிசைக்கும் டயலொக் திட்டத்தின் கீழ்

# புதிய தொலைத்தொடர்பு கோபுரம்

நாட்டின் ஒவ்வொரு மூலையிலும் தொலைத்தொடர்பு இணைப்பை மேலும் விரிவுபடுத்தும், மேம்படுத்தும் திட்டத்தின் மற்றுமொரு முயற்சியாக, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, அதன் ‘நாற்றிசைக்கும் டயலொக்’ செயற்றிட்டத்தின் கீழ் சமீபத்தில் குருநாகல் மாவட்டம் தீகிதவை பகுதியில் தொலைத்தொடர்பு கோபுரமொன்றை நிறுவி செயற்படுத்தியதன் மூலம் பின்தங்கிய கிராமிய பகுதிகளுக்கும் தொலைத்தொடர்பு வசதிகளை விரிவுபடுத்தியுள்ளது.

தீகிதவை பிரதேசத்திற்கு மேலதிகமாக தம்பகல்ல, வாகொல்ல, தெலஹெர, பிஹல்பொல, வடுவாவ, கெலேமுல்ல, மாகடுவாவ ஆகிய குருநாகல் மாவட்டத்துள் அடங்கும் ஏனைய கிராமங்களிலும் அனைத்து இலங்கையர்களுக்கும் பரந்த தொலைத்தொடர்பு வசதிகளை வழங்கும் நோக்கத்திற்கு அமைவாகவே இப்பகுதிகளில் இவ்வாறு தொலைத்தொடர்பு கோபுரங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றுடன் வவுனியா மாவட்டம் எத்தவெட்டுனுவெவ பகுதியிலும் மட்டக்களப்பு மாவட்டம் அறுகங்குடா, புழுகனவாமலை ஆகிய கிராமிய பிரதேசங்களிலும் தொலைத்தொடர்பு கோபுரங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

மேலும், தற்போதைய சவால்மிக்க சூழ்நிலையில் தொலைத்தொடர்பு பரவலை விரிவுபடுத்தி வாடிக்கையாளர்களுக்கு தொடர்ச்சியான ஆதரவை வழங்கும் முயற்சியின் விளைவாக, 2022 ஆம் ஆண்டு நிறைவடையும் போது டயலொக் வலையமைப்பானது நாடுபூராவும் 180 க்கும் அதிகமான கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் உள்ளடக்கியவாறு 4,700 க்கும் அதிகமான மொபைல் 4G கோபுரங்களை நிறுவியுள்ளது. இது இலங்கையில் நிறுவப்பட்டுள்ள அதிக எண்ணிக்கையிலான தொலைத்தொடர்பு கோபுரங்களாகும். அத்துடன், 95% ற்கும் அதிகமான சனத்தொகையினருக்கு 4G வலையமைப்பு வசதிகளை டயலொக் நிறுவனத்தால் வழங்க முடிந்துள்ளது. மிகவும் பின்தங்கிய பிரதேசங்களுக்கு தொலைத்தொடர்பு வசதிகளை வழங்கும் திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதற்காக Green Field கோபுரங்களை பயன்படுத்தியிருப்பதுடன், மக்கள் தொகை பரவலாக உள்ள பிரதேசங்களில் Lamp Pole வழிமுறை மூலம் சேவைகள் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




டயலொக் வலையமைப்பின் மேற்படி பரவெல்லை மேம்மடுத்தலானது, வலையமைப்பு தொடர்பிலான மேற்பார்வையில் ஈடுபடுகின்ற சர்வதேச நிறுவனங்களின் பாராட்டுகளுக்கு உள்ளாகியிருப்பதுடன் Open Signal நிறுவனத்தால் ‘சிறந்த 4G பரவெல்லை, வேகமான Upload - Download அனுபவம் ஆகியவற்றிற்கான சிறப்பு விருதுகளையும் பெற்று டயலொக் கௌரவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டயலொக் ‘WiFi 6’ அறிமுகம்




டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி இலங்கையில் Wi-Fi தொழில்நுட்பத்தில் அடுத்த தலைமுறை தரநிலையான ‘WiFi 6’ ஐ அறிமுகப்படுத்தியுள்ளது.

அநேகமான வீடுகளில், ஸ்மார்ட்ஃபோன்கள், டெப்லட்டுகள் தொடக்கம் TVகள், ஸ்மார்ட் ஹோம் சாதனங்கள், தடையற்ற இணைப்பு தேவைப்படும் அதிக Wi-Fi இல் இயக்கப்படும் சாதனங்கள் போன்றன பாவனையில் இருப்பதால், இந்த புதிய Wi-Fi 6 ஆனது மேற்குறிப்பிட்ட பல சாதனங்களுக்கு இடையே சிறந்த தகவல்தொடர்புகளை செயற்படுத்தும் தன்மையை கொண்டுள்ளது. இத்தகைய சந்தர்ப்பத்தில் ஒரே நேரத்தில் அதிவேகத்திலும் குறைந்தளவு தாமதத்திலுமான டேட்டா தேவைப்படும் சந்தர்ப்பம் எழுவதால், அதன்போது Wi-Fi 6 ஆனது குறுக்கீடுகள் மிக்க வலயங்களிலும் கூட (அதாவது பல Wi-Fi வலையமைப்புகள் கொண்ட) சாதனங்கள் உகந்த முறையில் பரந்த பாதுகாப்புடன் தொழிற்பட உதவிகரமாக இருக்கின்றது.

Wi-Fi 6 என்பது முன்னையவற்றை காட்டிலும் கணிசமான மேம்படுத்தல் தன்மையை கொண்டதாகும், பல சாதனங்கள் டேட்டாவை கோரத் தொடங்கும் போதும், ஒரே வலையமைப்பில் பல Wi-Fi சாதனங்களைப் பயன்படுத்தும் போதும் ஏற்படும் சிக்கல்களைத் தணிப்பதற்கு உதவும் வகையில் Wi-Fi 6 புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்துகிறது. மேலும், இந்த Wi-Fi 6 தொழில்நுட்ப பாவனையின்போது ஏற்படும் குறைந்தளவேயான தாமதமானது சிறந்த கேமிங் (gaming) மற்றும் ஸ்ட்ரீமிங் (streaming) அனுபவத்தை வழங்குகின்றமை சிறப்பம்சமாகும்.

Dialog Smart Home சமீபத்தில் WiFi 6 மூலம் செயற்படுத்தும் ‘Wi-Fi Mesh’ ஐ அறிமுகப்படுத்தியது, இது ஒரு முழுமையான மற்றும் மிகவும் பாதுகாப்பான வீட்டு Wi-Fi அமைப்பாக, குறைந்த வலையமைப்பு புள்ளிகளை அகற்றுவதன் மூலம் வீட்டின் ஒவ்வொரு மூலையிலும் Wi-Fi இணைப்பை செயற்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது, எதிர்காலத்திற்கு தயார்மிகு தீர்வு தொகுப்புகளில் இணைந்த சமீபத்திய சேர்ப்பிப்பாக இது அமைந்துள்ள அதேவேளை, தடையற்ற இணைப்பின் தேவையையும் நிவர்த்தி செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# திட்டம் இரண்டு



சொக்கலிங்கம் லோஜினி
( இரண்டாம் வருடம், யாழ். பல்கலைக்கழகம்)

“உண்மை என்னென்னா இங்க யாருக்குமே யார பத்தியுமே முழுசா தெரியுரதே இல்ல; சில நேரங்கள்ல அந்த சீக்ரட்ஸ், சீக்ரட்ஸ் ஆகவே இருந்துட்டா நல்லது” இந்த வசனத்தை மையமாக வைத்து தான் இந்தத் ‘திட்டம் இரண்டு’ என்ற படத்தினுடைய கடைசி கிளைமாக்ஸில் பெரிய ட்விஸ்ட் வெச்சுருப்பார் தயாரிப்பாளர் தினேஷ் கண்ணன்.

திட்டம் இரண்டு என்ற படமானது தயாரிப்பாளர் தினேஷ் கண்ணனினால், விக்னேஷ் கார்த்திக்கின் இயக்கத்தில், சஜித் ரகுநாதனின் இசையில் 30 ஜூலை 2021 இல் வெளியான இந்திய தமிழ் மொழி கிரைம் த்ரில்லர் திரைப்படமாகும். இது 2007 இல் ரெயின்போ ஐஸ் என்ற கொரிய திரைப்படத்தை அடிப்படையகக் கொண்டுப் படைக்கப்பட்டது. தமிழ் சினிமாவில் இதுவரை யாரும் பார்க்காத ஒரு கதையை தேடிப் பிடிக்க வேண்டுமெனப் படத்தின் இயக்குனர் தீயாய் தேடி இருப்பார் போலிருக்கிறது.

இப் படத்தில் இறுதி கிளைமாக்ஸ் வரை சஸ்பென்ஸ் என்ன என்பதை யூகிக்க முடியாத ஒரு திரைக்கதையாகும். இப்படத்தில் ஐஸ்வர்யா ராஜேஷ் நடிகையாகவும் சுபாஷ் செல்வம் நடிகராகவும் நடித்துள்ளனர். படத்தின் இறுதி காட்சியில் வைக்கப்பட்டுள்ள அந்த திருப்பம் அதிர்ச்சி என்றாலும் அதனை உணர்வு ரீதியாக வைத்து விட்டதால் ஐயோ! என சொல்ல வைக்காமல் அச்சச்சோ என்று பாவப்பட வைத்துவிட்டார் இயக்குனர் விக்னேஷ் கார்த்திக்.

ஒரு க்ரைமிம் திரில்லராக ஆரம்பமாகும் கதைப் பரபரப்பாக நகராமல் கொஞ்சம் தடுமாறி பின்னர் வேகம் எடுத்து எதிர்பாராத அதிர்ச்சி திருப்பத்துடன் கிளைமாக்ஸை நோக்கிச் சென்று உணர்வுபூர்வமாக முடிகிறது. இடையிலுள்ள சில திரைக்கதை தடுமாற்றங்களை சரி செய்திருந்தால் இன்னும் சிறப்பான விறுவிறுப்பான திரில்லர் படமாக அமைந்திருக்கும்.

ஐஸ்வர்யா ராஜேஷ் சினிமா துறையிலே ஒரு டார்க் ஸ்கின் நடிகை. எனவே ஐஸ்வர்யா ரராஜேஷ் முதன்மைக் கதாநாயகியாக இந்தப் படம் மூலம் தன் நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார்.

கதைசுருக்கம் நம்ம ஹீரோயின் ஆதிரா பொலிஸ் அதிகரியாக இருகாங்க! அவங்களுடைய நெருங்கிய நண்பி தீபா இறத்துப்போனதை இன்வெஸ்டிகேட் பண்றாங்க ஆதிராவுக்கு தீபவோட கணவன் மேலதான் சந்தேகமா இருக்கு, தீபா எப்படி இறந்தாங்க என்பதை கண்டுபிடிக்கப் போகும் சிஸ்டம் தான் படத்தோட கதை.

படம் முழுவதுமே ஒரு விறுவிறுப்பு நிறைந்திருக்கும் என்னடா படம் பொலிஸ், கேஸ், தேடல் எண்டே போயிட்டு இருக்கு என்று ஒரு சோர்வு வரும். ஆனால் படத்துட கிளைமாக்ஸ் சீனில் தான் பாக்குறவங்களுக்கு மிகப்பெரிய திருப்பு முனையை வெச்சுருப்பார் தயாரிப்பாளர். மேலும் இந்தத் திரைப்படமானது குறைந்த கதாபாத்திரங்களுடனே நகர்ந்து இருக்கும்.

இப்படத்தில் வரும் துணைப் பாத்திரங்களும் கூட சுவாரஸ்யமாக நடித்திருப்பாங்க.

யதார்த்தமான இயல்பான நடிப்பின் மூலம் காவல்துறை அதிகாரியாக கதாபாத்திரம் ஏற்று நடிக்கும் இவர் காவல்துறைக்கு உரிய கம்பீரத்தை முகத்தில் காட்ட கொஞ்சம் தடுமாறி இருக்கிறார். இக்கதையில் சென்னைக்கு வந்த உடனேயே நெருங்கிய தோழியின் கொலையை பற்றி விசாரிக்க வேண்டிய சூழலில் அந்த கம்பீரத்தை காட்டுவது கடினமானதுதான் என்றாலும், இன்னும் கொஞ்சம் கோபம், ஆற்றாமை ஆகியவற்றை தன் நடிப்பில் சேர்த்திருக்கலாம். ஆனாலும் காதல் காட்சிகளில் இயல்பாய் நடித்திருக்கிறார்.

கதாநாயகி ஐஸ்வர்யாவை விழுந்து விழுந்து காதலிப்பவராக சுபாஷ் செல்வம் தங்கள் மீது அதிக அக்கறை செலுத்தும் இப்படியான ஒரு காதலன் தனக்கு கிடைக்க மாட்டாரா? என ஐஸ்வர்யாவை மட்டுமல்ல படம் பார்ப்பவர்களையும் ஏங்க வைக்கும் நடிப்பு.

ஐஸ்வர்யாவுடன் சிறுவயதிலிருந்தே நெருக்கமான தோழியாக இருக்கும் கதாபாத்திரத்தில் அனன்யா ராம்பிரசாத் இவர் ஏற்று நடித்து இருக்கும் கதாபாத்திரத்திற்காக ரெபெரென்ஸ் கிடைப்பதெல்லாம் கொஞ்சம் கடினமானது தான் இயக்குனர் சொல்வதை வைத்து தனது கற்பனையையும் சேர்த்து அனுதாபம் வரும் அளவிற்கு நடிப்பாற்றலை வெளிக்காட்டியுள்ளார்.

மேலும் கொலைக்கதை என்றால் ரசிகர்களை குழப்புவதற்காக நான்கைந்து கதாபாத்திரங்களை படத்தில் வைப்பார்கள். அந்த வழக்கத்தை மாற்றாமல் இந்த படத்திலும் அப்படியான சில கதாபாத்திரங்கள் இருக்கின்றன. ஆனாலும் சண்டைக் காட்சிகள் என்பது சற்று குறைவாகவே தான் காணப்படுகின்றது.

இப்படத்தில் வரும் துணை கதாபாத்திரங்களும் படத்திற்கு வலு சேர்த்துள்ளனர். அதாவது குறைவான கதாபாத்திரங்களின் தெரிவுடன் கதையானது இனிமையாகக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. மேலும் இப்படத்தில் பெரிதாக நகைச்சுவை காட்சிகள் என்று சொல்லுவதற்கு இல்லை. ஆனால் படத்தின் ஆரம்ப கட்சியில் மட்டும் சில நகைச்சுவைகள் உள்ளன. ஒரு வகையான விறுவிறுப்புடனே அடுத்து என்ன நிகழும் என்று பார்வையாளர்களின் ஆர்வத்தை தூண்டும் வகையில் ஒரு சுவாரஸ்யமான

திருப்பத்துடன் கதை நகர்த்தப்பட்டுள்ளது. கோகுல் பினாயின் ஒளிப்பதிவில் இரவு நேர காட்சிகளும், த்ரில்லர் படங்களுக்கே உரிய பிரேம்களிலும் கூடுதல் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. படத்தின் சுவாரசியமான காட்சிகளிலும் இரவு நேர காட்சிகளிலும் படத்தின் ஒளிப்பதிவு என்பது பார்வையாளர்களுக்கு தெளிவாக விளங்கும் வண்ணமும் அமைந்துள்ளது. படத்தை பார்க்கும் பொழுது நாமும் அதனுடன் பயணிப்பது போன்ற உள்ளுணர்வு தோன்றும்.

படத்தின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை ஒரு மெல்லிசையான தீம் இசையை படம் முழுவதும் அடிக்கடி பொருத்தமாகப் பயன்படுத்தி இருக்கிறார் இசையமைப்பாளர் சதீஷ் ரகுநாதன்.

மேலும் இப்படத்தில் உள்ள காதல் பாட்டானது இக்கால காதலர்கள் மத்தியில் மிகவும் விரும்பி ரசிக்கும் பாடலாகவும் அமைந்துள்ளது. திட்டம் இரண்டு என்ற படத்தின் தலைப்பிற்கு பொருந்தும் வகையிலாக தலைப்பின் பொருத்தப்பாடு படம் முழுவதும் கொண்டு நகர்த்தப்பட்டுள்ளது. மற்றும் படம் முழுவதும் ஒரு முரண்பாடு பிரச்சினையை மையப்படுத்திக் கொண்டே கதை கொண்டு செல்லப்பட்டுள்ளது.

படத்தின் ஆரம்பம் முதல் இறுதிக் கட்டம் வரை ஐஸ்வர்யாவே முதன்மை பாத்திரமாக நின்று கதையை சுவாரஸ்யப்படுத்தியுள்ளார். கதாபாத்திரங்களின் யதார்த்த நடிப்புகள் மூலம் யதார்த்தமான வாக்கியங்களின் பிரயோகமும் படத்திற்கு மேலும் சுவையை கூட்டியுள்ளன. இரண்டு மணி நேர குறைவான படமாக இருந்தாலும் நிறைய சுவாரஸ்யமான திருப்பங்களை கொண்டு காணப்படுகின்றது. பெரிதாகக்கூறும் அளவில் சண்டை காட்சிகள் இல்லை. படத்தைப் பார்க்கும் ரசிகர்களுக்கு தாங்களே கூடபயணிப்பது போல ஓர் உணர்வை க்ரைம் த்ரில்லர் படங்கள் ஏற்படுத்த வேண்டும். அப்படியான ஒரு பயணத்தை ஆரம்பத்தில் இந்தப் படம் ஏற்படுத்த தடுமாறினாலும், போகப்போக ஏற்படுத்திவிட்டார்கள்.

படத்தின் முடிவானது திறந்த முடிவாக (openending) பார்வையாளர்களே இறுதி முடிவை எடுக்கும் வகையில் கேள்விக்குறியாக விடப்பட்டது. இதுவரை வெளிவந்த படங்களில் பால்புதுமையினர் சார்ந்த திரைப்படங்கள் அனைத்துமே திருநங்கைகளின் பிரச்சினைகளை, அவர்களது மாற்றங்களை, அவர்கள் எதிர்க்கொள்ளும் சவால்களையும், அவர்கள் சமூகத்தில் உடல், உள ரீதியாக மாற்றமடைதல் சார்ந்த பிரச்சினைகளை மாத்திரம் எடுத்துக்காட்டும் படங்களாகவே வெளிவந்தன. ஆனால் இந்தத் ‘திட்டம் இரண்டு’ என்ற திரைப்படமானது முற்றிலும் வேறுபட்ட கோணத்தில் திருநம்பிகளின் விம்பத்தை படம் பிடித்து காட்டியுள்ளது.

திருநம்பியின் காதலை நிரூபிக்கும் முகமாகத் தான், தனது காதலை இறுதியில் ஐஸ்வர்யாராஜேஷிடம் கூற வருகையில் அதை அவளும் சமூகமும் எவ்வாறு ஏற்றுக்கொள்ளும் என்ற கேள்வியை பார்வையாளர்கள் மத்தியில் எழுப்பிய வண்ணம் இந்த படமானது பார்வையாளர்களின் விமர்சனங்களுக்கு எதிராக கேள்வியாக விடப்பட்டுள்ளது.

முதன்முறையாக திருநம்பிகளை மையப்படுத்தி எடுத்தது பாராட்டுக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது. படத்தின் ஆரம்பக் காட்சியிலேயே சோம்பலாக பார்வையாளர்களை சோர்வுக்குக் கொண்டு சென்றாலும், இறுதி கிளைமாக்ஸில் விறுவிறுப்பாக ஆர்வமாக தூக்கத்தில் இருந்த பார்வையாளர்களை எழுப்பி சுறுசுறுப்பாக அமர வைக்கும் திகிலான படமாக சென்றது.

கதையில் நிறைய லாஜிக் மைனஸ் (Largic mines) இருக்கும் இறுதி கட்டமான இரண்டாம் பாதியைப் பார்க்கும் போதுதான் இதையெல்லாம் தெரிந்தே தான் இறுதியில் வெச்சிருப்பாங்க என்று தோன்றும். ஒரு சில வசனங்கள் யதார்த்தமாக இயல்பாகவே இருக்கும்

உதாரணம், ஒருத்தர திரும்பத் திரும்ப பார்த்துகிட்டே இருக்கும்போது அவங்கள ரொம்பபிடிச்சு போயிரும். இல்லாட்டி சுத்தமா பிடிக்காம போயிரும். உதாரணம், ஆறு வயசுல அவ தான் எனது முதல் எதிரி என்று சொல்லிட்டு, அடுத்த நாளே அவதான் எனது முதல் நம்பி என்று சொல்லுதல்.

மேலும் இப்படமானது அதிகமான சமூக கருத்துகளை மக்களுக்கு கூறுவதாக அமைகின்றது. இறுதியில் ரசிகர்களை கண்கலங்க வைக்கும் நிலைக்கு கொண்டு செல்லும். படத்தைப் பார்த்துவிட்டு வீடு சென்ற பின்பும் படத்தைப் பற்றிய ஆழ்ந்த யோசனையில் இருக்கத் தோன்றும்.

படத்தின் இறுதி கிளைமாக்ஸில் அர்ஜுன் திருநம்பியாக மாறியதை நம்ப முடியாமல் எதிர்பார்ப்புகளுடனும் தனது வருங்காலத்தை நினைத்து சந்தோஷமாகவும் இருந்த ஐஸ்வர்யா ராஜேஷுக்கு இறுதிக்காட்சியில் வந்த திடீர் திருப்பமானது அவளது எதிர்பார்ப்பை சீர்குலைத்தது. அத்தருணத்தில் அர்ஜுன் பிங்கர் பிரிண்டை(Finger Print) வைத்து தான் என்பதை நிரூபிக்கும் காட்சியை பார்த்தவுடனே புல்லரித்து விட்டது.

படத்தின் முதலாம் பகுதியின் 30 நிமிடம் சில காட்சிகளை பொறுத்துக் கொண்டுப் பார்த்தால் கண்டிப்பாக ஒரு தடவை பார்க்கக்கூடிய தரமான, சுவாரஸ்யமான படமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. படத்தை பார்த்து முடித்த பின்னும் மனதுக்குள் ஏதோ ஒரு சோகம் நீடித்துக்கொண்டே இருந்தது.

திருநம்பிகளின் காதலை, அவர்களின் அவஸ்தையை, அவர்களின் விம்பத்தை வெளிக்காட்டும் வண்ணம் ‘திட்டம் இரண்டு’ படத்தின் மூலம் தினேஷ் கண்ணன் வெளிப்படுத்தியுள்ளார்.



பிரான்சிஸ்

# போப் பிரான்சிஸ் வைத்தியசாலையில் அனுமதி

சுவாசத் தொற்றுநோய் காரணமாக திருதந்தை பிரான்சிஸ், ரோமில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அங்கு அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் அவருக்குக் கொரோனா தொற்று இல்லை என்றும், சில நாட்களுக்கு அவர் மருத்துவமனையில் ஓய்வில் இருப்பார் எனவும் வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

86 வயதான போப் ஆண்டவர் பிரான்சிஸ் அண்மைக்காலமாக உடல் உபாதைகளால் அவதிப்பட்டு வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.



பாகிஸ்தான்

## மாதாந்தம் 10 கிலோ கோதுமை இலவசம்



பாகிஸ்தான் அரசானது கடந்த சில ஆண்டுகளாகப் கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகிறது.

குறிப்பாக அந்நாட்டில் ஏற்பட்டுள்ள பணவீக்கம் காரணமாக அத்தியாவசிய பொருட்களின் விலை விண்ணை முட்டும் அளவுக்கு உயர்வடைந்துள்ளதால் அந்நாட்டு மக்கள் அன்றாட வாழ்வில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் `ரமழான்` மாதத்தையொட்டி பாகிஸ்தானிலுள்ள பஞ்சாப் மாகாணத்தில் வசிக்கும் ஏழை குடும்பங்களுக்கு தலா 10 கிலோகிராம் கோதுமை மாவினை இலவசமாக வழங்க அந்நாட்டு அரசு உத்தரவிட்டது.


இந்நிலையில் கோதுமை மா மூட்டைகளுடன், பெஷாவர் நகரம் வழியாக சென்ற லொறியை விரட்டி சென்று பிடித்த பொதுமக்கள், லொறிமீது முண்டியடித்து ஏறி அனைத்து மூட்டைகளையும் திருடிச் சென்றனர்.

இதன்போது ஏற்பட்ட தள்ளு முள்ளுவில் இதுவரை 4 முதியவர்கள் உயிரிழந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நெதர்லாந்து

## 550 குழந்தைகளுக்கு தந்தையான நபரால் பரபரப்பு





நெதர்லாந்தைச் சேர்ந்த நபர் ஒருவர் 'விந்து தானம் ' மூலம் 550 குழந்தைகளுக்கு தந்தையாகியுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


`ஜோனத்தான் ஜாக்கப்` என்ற இசைக் கலைஞரே விந்து தானம் செய்துவருவதை மறைத்து 13 வெவ்வேறு மருத்துவமனைகளில் விந்து தானம் செய்துவந்துள்ளார்.

மேலும் இணையதளம் மூலம் சர்வதேச விந்து வங்கிகளுடனும் தொடர்பில் இருந்துள்ளார். இந்நிலையில் உறவு முறைக்குள் புணர்ச்சி ஏற்படும் அபாயம் உள்ளதால், ஜோனத்தான் ஜாக்கபிடம் விந்தணுக்களை பெற்ற பெற்றோர் 25 பேர், இனி அவர் விந்து தானம் செய்ய தடை விதிக்குமாறும், விந்து வங்கிகளில் சேகரிக்கப்பட்டுள்ள அவரது விந்தணுக்களை அழிக்க உத்தரவிடுமாறும் நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

இதனையடுத்து "ஒருவர் 12 பெண்களுக்கு மேல் விந்து தானம் செய்யக்கூடாது என்றும், 25 குழந்தைகளுக்கு மேல் தந்தையாக இருக்க கூடாது" என்றும் நெதர்லாந்தில் சட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கா

## 'டொல்பின்களையும் விட்டு வைக்கவில்லை'



டொல்பின்களுடன் நீந்துவது ஹவாய் மாகாணத்தில் ஒரு பிரபலமான சுற்றுலா நடவடிக்கையாகும்.

ஆனால் டொல்பின்கள் இருக்கும் இடத்தில் இருந்து 45 மீற்றர்களுக்கு உள்ளாக நீந்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஹொனாவ் வளைகுடாவில் அதிகாரிகள் ரோந்துப் பணியில் ஈடுபட்டபோது 33 நீச்சல் வீரர்கள், டொல்பின்களை துன்புறுத்துவதைக் கண்டனர். இதனைத் தொடர்ந்து நீச்சல் குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களிடம் ஹவாய் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சென்னை

## EPS க்கு AK வாழ்த்து;பரபரப்பில் அரசியல் அரங்கு



எடப்பாடி பழனிசாமிக்கு( E.P.S) நடிகர் அஜித்குமார்(AK) வாழ்த்துத் தெரிவித்துள்ள சம்பவம் அரசியல் அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நடிகர் அஜித்குமாரின் தந்தை சுப்பிரமணியம் உடலநலக்குறைவால் கடந்த 24 ஆம் திகதி காலமானார் இதனையடுத்து அவரது குடும்பத்தினருக்கு திரைத்துறையைச் சேர்ந்தவர்கள், அரசியல் பிரபலங்கள் உள்ளிட்ட பலர் தமது இரங்கலைத் தெரிவித்து வந்தனர்.

அந்தவகையில் அஜித்குமாரைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு எடப்பாடி பழனிசாமியும் ஆறுதல் கூறியுள்ளார். இந்நிலையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்(அ.தி.மு.க ) பொதுச்செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டமைக்கு எடப்பாடி பழனிசாமிக்கு நடிகர் அஜித்குமார் தொலைபேசி வாயிலாக தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

திரைத்துறையைச் சேர்ந்த பலரும் அண்மைக்காலமாக அரசியலை நோக்கிப் படையெடுத்து வரும் நிலையில் இலட்சக்கணக்கான ரசிகர்களைக் கொண்ட நடிகர் அஜித் குமார் எடப்பாடி பழனிசாமிக்கு வாழ்த்துத் தெரிவித்துள்ளமை அரசியல் அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## 'பெண்கள் என்றாலே விமர்சனம் செய்வார்கள்'

### தமிழிசை கவலை



"பெண்ணாக இருந்தாலே விமர்சனம் செய்வார்கள்" என தெலுங்கானா ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் கவலை தெரிவித்துள்ளார்.

நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவ கல்லூரியின் 130ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் "பெண் என்றாலே சவாலை சந்தித்து தான் ஆக வேண்டும். அதுவும் அரசியல் கட்சி தலைவராக இருந்தால் அதை விட அதிகமாகச் சந்திக்க வேண்டும். குறிப்பாக கடுமையான விமர்சனங்களை சந்திக்க வேண்டி ஏற்படும். என்னைப் பற்றி பல்வேறு விமர்சனங்களை கூறினார்கள். நான் எம்.பி.பி.எஸ். படித்துள்ளேன். நன்றாக பேசுவேன். கவிதை எழுதுவேன். நிர்வாகம் செய்வேன். ஆனால் இதை எல்லாம் யாரும் கூறவில்லை. நீ குட்டையாக இருக்கிறாய். கறுப்பாக இருக்கிறாய். சுருட்டை முடியுடன் இருக்கிறாய் என்று தான் கூறினார்கள். நல்லதை யாரும் சொல்ல மாட்டார்கள். அடிக்க, அடிக்க எழும் பந்தை போல தன்னம்பிக்கையுடன் உயர வேண்டும் என்றார்.



# இன்று ஆரம்பிக்கிறது ஐ.பி.எல்

இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு -20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக்கானது (ஐ.பி.எல்), அஹமதாபாத்தில் இன்றிரவு 7.30 மணிக்கு சென்னை சுப்பர் கிங்ஸை நடப்புச் சம்பியன்கள் குஜராத் டைட்டன்ஸ் எதிர்கொள்ளும் போட்டியுடன் ஆரம்பிக்கின்றது.

முன்னெப்போதுமில்லாத வகையில் 10 அணிகளின் பங்கேற்புடன் இந்த 16ஆவது பருவகாலமானது, அந்தந்த அணிகளின் சொந்த மைதானம், எதிரணியின் மைதானம் என்றவாறு முதன்முறையாக நடைபெறவுள்ளது.

தவிர, நாணயச் சுழற்சிக்குப் பின்னர் அணியை அறிவிப்பது, தாக்கம் செலுத்தக்கூடிய வீரரை போட்டியின் எப்போதாவது பிரதியிடல், நோ போல், வைட்களுக்கு மீள் பரிசீலனை செய்யக்கூடிய வசதி என பல விறுவிறுப்பான மாற்றங்களுடன் ஐ.பி.எல் இம்முறை களம் காண்கிறது.

இலங்கையைப் பொறுத்தவரையில் பானுக ராஜபக்ஷ, வனிடு ஹஸரங்க, மதீஷ பத்திரண, மகேஷ் தீக்ஷன ஆகியோர் ஐ.பி.எல்லில் களம் காண்பதுடன், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த விஜயகாந்த் வியாஸ்காந்த் வலைப்பந்துவீச்சாளராகக் காணப்படுகிறார்.

அயர்லாந்துக்கெதிரான

## தொடரைக் கைப்பற்றிய பங்களாதேஷ்



அயர்லாந்துக்கெதிரான இருபதுக்கு  20 சர்வதேசப் போட்டித் தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்றிருந்த பங்களாதேஷ், சட்டோகிராமில் நேற்று முன்தினம் நடைபெற்ற 17 ஓவர்கள் கொண்டதாக நடைபெற்ற இரண்டாவது போட்டியை வென்றமையைத் தொடர்ந்தே இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: அயர்லாந்து

பங்களாதேஷ்: 202/3 (17 ஓவ. ) (துடுப்பாட்டம்: லிட்டன் தாஸ் 83 (41), றொனி தலுக்டர் 44 (23), ஷகிப் அல் ஹஸன் ஆ.இ 38 (24), தௌஹிட் ஹிரிடோய் 24 (13) ஓட்டங்கள். பந்துவீச்சு: பென் வைட் 2/28[4])

அயர்லாந்து: 125/9 (17 ஓவ. ) (துடுப்பாட்டம்: கேர்ட்டிஸ் கப்மர் 50 (30) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஷகிப் அல் ஹஸன் 5/22 [4], தஸ்கின் அஹ்மட் 3/27 [4], ஹஸன் மஹ்மூட் 1/6 [2], முஸ்தபிசூர் ரஹ்மான் 0/21 [3])

போட்டியின் நாயகன்: ஷகிப் அல் ஹஸன்

இரண்டு அணிகளுக்குமிடையிலான மூன்றாவது போட்டியானது இன்று பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

பந்துவீச்சாளர்களின் தரவரிசையில்

## முதலாமிடத்துக்கு முன்னேறிய ரஷீட் கான்



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு - 20 சர்வதேசப் போட்டிகளுக்கான பந்துவீச்சாளர்களின் தரவரிசையில் முதலாமிடத்துக்கு ஆப்கானிஸ்தானின் ரஷீட் கான் முன்னேறியுள்ளார்.

பாகிஸ்தானுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் மூன்று விக்கெட்டுகளைக் கைப்பற்றியதைத் தொடர்ந்தே, இரண்டாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி முதலாமிடத்தையடைந்துள்ளார்.

இதேவேளை, இதே தொடரில் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய ஆப்கானிஸ்தானின் வேகப்பந்துவீச்சாளர் பஸல்ஹக் பரூக்கி, 15ஆம் இடத்திலிருந்து 12 இடங்கள் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

இது தவிர, குறித்த தொடரில் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய ஆப்கானிஸ்தானின் சுழற்பந்துவீச்சாளர் முஜீப் உர் ரஹ்மான், 10ஆம் இடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ரஷீட் கான், 2. வனிடு ஹஸரங்க, 3. பஸல்ஹக் பரூக்கி, 4. ஜொஷ் ஹேசில்வூட், 5. அடில் ரஷீட், 6. அடம் ஸாம்பா, 7. சாம் கர்ரன், 8. முஜீப் உர் ரஹ்மான், 9. அன்றிச் நொர்கியா, 10. மிற்செல் சான்ட்னெர்.

இந்நிலையில், மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான மூன்று போட்டிகள் கொண்ட தொடரில் 68 ஓட்டங்களைப் பெற்ற தென்னாபிரிக்காவின் றீலி றொஸோ, துடுப்பாட்டவீரர்களுக்கான தரவரிசையில் எட்டாமிடத்திலிருந்து இரண்டு இடங்கள் முன்னேறி ஆறாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

சூரியகுமார் யாதவ், 2. மொஹமட் றிஸ்வான், 3. டெவோன் கொன்வே, 4. பாபர் அஸாம், 5. ஏய்டன் மார்க்ரம், 6. றீலி றொஸோ, 7. முஹமட் வஸீம், 8. டேவிட் மலன், 9. ஆரோன் பின்ஞ், 10. ஜொஸ் பட்லர்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானுக்கெதிரான தொடரில் 72 ஓட்டங்களைப் பெற்றதோடு, 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய பாகிஸ்தானின் ஷடாப் கான், சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் 12ஆம் இடத்திலிருந்து எட்டு இடங்கள் முன்னேறி நான்காமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஷகிப் அல் ஹஸன், 2. ஹர்டிக் பாண்டியா, 3. மொஹமட் நபி, 4. ஷடாப் கான், 5. வனிடு ஹஸரங்க.

இதேவேளை இந்தியாவுக்கெதிரான இறுதி ஒருநாள் சர்வதேசப் போட்டியில் 4 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அவுஸ்திரேலியாவின் சுழற்பந்துவீச்சாளர் அடம் ஸாம்பா, ஒன்பதாமிடத்திலிருந்து மூன்றிடங்கள் முன்னேறி ஆறாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஜொஷ் ஹேசில்வூட், 2. ட்ரெண்ட் போல்ட், 3. மொஹமட் சிராஜ், 4. மிற்செல் ஸ்டார்க், 5. ரஷீட் கான், 6. அடம் ஸாம்பா, 7. ஷகீன் ஷா அஃப்ரிடி, 8. முஜீப் உர் ரஹ்மான், 9. ஷகிப் அல் ஹஸன், 10. மற் ஹென்றி.

இந்நிலையில், குறித்த போட்டியில் 30 ஓட்டங்களைப் பெற்ற இந்தியாவின் றோஹித் ஷர்மா, துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில் ஒன்பதாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி எட்டாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

பாபர் அஸாம், 2. றஸி வான் டர் டுஸன், 3. குயின்டன் டி கொக், இமாம்-உல்-ஹக், 5. ஷுப்மன் கில், 6. டேவிட் வோர்னர், 7. விராட் கோலி, 8. றோஹித் ஷர்மா, 9. ஸ்டீவ் ஸ்மித், 10. பக்கர் ஸமன்.

இதேவேளை, நெதர்லாந்துக்கெதிரான இறுதி இரண்டு ஒருநாள் சர்வதேசப் போட்டிகளிலும் 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றியதோடு 18 ஓட்டங்களைப் பெற்ற சிம்பாப்வேயின் சிகண்டர் ராசா, ஆறாமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி ஐந்தாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

ஷகிப் அல் ஹஸன், 2. மொஹமட் நபி, 3. ரஷீட் கான், 4. மிற்செல் சான்ட்னெர், 5. சிகண்டர் ராசா.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் வெள்ளிக்கிழமை, 31 மார்ச் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.